எஸ்.நவராஜ் செல்லையா
M.A., D.P.E., M.P.Ed




# இந்தியாவில் ஆசிய விளையாட்டுகள்

# இந்தியாவில் ஆசிய விளையாட்டுகள்

மூன்று முறை தேசிய விருது பெற்ற நூலாசிரியர்

**டாக்டர் எஸ். நவராஜ் செல்லையா**

M.A., M.P.Ed., Ph.D., D.Litt. D.Ed., FUWAI,

வெள்ளிவிழா ஆண்டு 1970-95

ராஜ்மோகன் பதிப்பகம்

8, போலீஸ் குவாட்டர்ஸ் ரோடு,
தி. நகர், சென்னை-600 017.

முதற்பதிப்பு : 1988
இரண்டாம்பதிப்பு : 1996

விலை ரூபாய் 10-00

கிரேஸ் பிரிண்டர்ஸ
சென்னை-17.

# முன்னுரை

'இந்தியாவில் ஆசிய விளையாட்டுக்கள்' என்னும் இந்த நூல், ஆசிய விளையாட்டுக்கள் பற்றிய முழு வரலாற்றினையும் அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டதாகும்.

ஒலிம்பிக் பந்தயங்கள் என்பது உலக நாடுகளுக்கிடையே எல்லாருக்குமான போட்டிகள் என்றால், ஆசிய விளையாட்டுக்கள் என்பது ஆசிய கண்டத்தில் உள்ள நாடுகளுக்கு இடையே மட்டும் நடைபெறுகின்ற போட்டிகளாகும்.

அதுபோலவே, காமன்வெல்த் எனும் அமைப்புகளுக்கு இடையே பிரதிநிதித்துவம் பெற்ற நாடுகளுக்கு இடையே நடைபெறும் போட்டிகளை 'காமன் வெல்த் விளையாட்டுக்கள்' என்றும்; இன்னும் வேறு நிலையில் அமைந்த முறையில் நடக்கும் போட்டிகளை ஐரோப்பிய விளையாட்டுப் போட்டிகள்' என்று நடத்தப்படுவதையும் நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

ஆசிய நாடுகளுக்கு இடையே இந்தப் போட்டிகள் நடைபெற வேண்டியதன் அவசியத்தை, விளையாட்டு ஆர்வம் மிக்க அனைவரும் அறிந்து கொள்ள விரும்புவது இயற்கையே.

ஆசிய விளையாட்டுக்கள் தோன்றிடக் காரணமான சூழ்நிலைகள், அவற்றிற்கான தோற்றம், வளர்ச்சி பற்றிய குறிப்புக்கள் எல்லாம் ஆசிய விளையாட்டுக்களின் வரலாறு என்ற தலைப்பில் விரிவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இதுவரை 8 ஆசிய விளையாட்டுப் போட்டிகள் பற்பல நாடுகளில் உள்ள தலைநகரங்களில், மிகவும் பிரபலமாகவும், பிரமாண்டமான பொருட் செலவிலும், பரபரப்பான சூழ்நிலை களிலும் நடத்தப் பட்டிருக்கின்றன.

அப்படிப்பட்ட வரலாற்றுக் குறிப்புக்களை, இது வரை நடைபெற்ற எட்டு ஆசிய விளையாட்டுக்கள் என்ற தலைப்பில், நடந்து முடிந்த வரலாற்றுப் பெருமை மிக்க முக்கியமான குறிப்புக்களைத் தொகுத்து சிறப்பாகக் கொடுக்கப்பட்டிருக் கின்றன.

ஆசிய விளையாட்டுக்களில் பங்கு பெற்ற நாடுகளின் எண்ணிக்கை; பங்கு பெற்ற வீரர்கள், வீராங்கனைகளின் எண்ணிக்கை; போட்டிக்குரிய போட்டி நிகழ்ச்சிகள்; போட்டி நடைபெற்ற நாட்கள்; போட்டியைத் தொடங்கி வைத்த முக்கியமானவர்கள், ஒவ்வொரு போட்டியிலும் வெற்றிபெற்று முதல் வரிசையில் நின்ற நாடுகள், அவைகள் பெற்ற வெற்றிப் பதக்கங்கள் என்பன போன்ற குறிப்புக்கள் எல்லாம் விரிவாகத் தரப்பட்டிருக்கின்றன.

ஒன்பதாவது ஆசிய விளையாட்டுப் போட்டிகள் என்கிற தலைப்பிலே, இந்தியாவில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகள் பற்றிய அற்புதமான நிகழ்ச்சிகளையெல்லாம் முடிந்தவரையில் கொடுத்திருக்கிறோம்.

இதுவரை எங்கும் நடைபெறாத அற்புதமான ஆரம்ப விழா, அதற்கான ஆடுகளங்கள், விளையாட்டு அரங்கங்கள், விரிவான அணுகு முறைகள், வித்யாசமான சூழ்நிலைகள், விளக்கமான போட்டி நிகழ்ச்சி முறைகள், விவரங்கள், விறுவிறுப்பான நிகழ்ச்சிப் பட்டியல்கள் என்றெல்லாம் உற்சாகத்துடன் படிக்கத் தக்க வகையிலே, செய்திகளை சேர்த்து எழுதியிருக்கிறோம்.

இவ்வளவு எழுச்சி மிக்க ஒரு விளையாட்டுப் போட்டியானது ஏழைநாடான இந்திய நாட்டிற்குத் தேவையா என்றெல்லாம் ஏராளமானவர்களின் வாயிலிருந்து எழுந்து எழுந்து வந்த ஏரா மான கேள்விகள் — ஒரு அதிசயமான சூழ்நிலையையும் அசாதாரணமான பிரச்சினைகளையும் ஏற்படுத்தத்தான் செய்தன.

விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்காகச் செய்யப் படுகின்ற செலவுகள் அனைத்தும் வீண் என்று பலர் கருதுவது அவர்களது அறியாமையையே காட்டுகிறது என்று பல அறிஞர்கள் கூறுகின்றார்கள்.

ஒரு நாட்டுக்கு அழகு, வலிமை, பெருமை என்பது அந்த நாட்டில் உள்ள ஆறுகள், மலைகள், வயல்கள், மரங்கள், காடுகள் மட்டும் அல்ல. அந்த நாட்டில் வாழும் வலிமையான மக்கள் வாழும் வளமான சமுதாய அமைப்பு தான் எல்லா புகழுக்கும் பெருமைக்கும் காரணமாகும்.

'வலிமையற்ற மக்கள் வாழும் நாடு சாபக் கேடானது' என்கிற வாசகம் உண்மையானது தான். இரண்டாம் பெரும் போரில் குண்டு விழுந்து முழுதும் அழிந்து போன ஜப்பான் நாடு, உழைப்பிலே பெற்ற முன்னேற்றத்தால் தான், இன்று உலக நாடுகளுக்கு இணையாக, உன்னதமான இடத்திலே, முதல்தரமான வரிசையிலே முன்னணி பெற்று விளங்குகிறது.

அந்த நாட்டு வீரர்களின் வலிமையால் தான் அந்த நாடு அற்புத முன்னேற்றம் பெற்று விளங்குகிறது. அந்த நாட்டின் வெற்றிக்குக் காரணம்—வலிமையான மக்கள் வாழ்வதால் தான்.

வலிமையான மக்களை உருவாக்கக் கூடிய வாய்ப்பையும் வசதியையும் வழங்குவது விளையாட்டுக்கள் தான். விளையாட்டுக்களால் தான் ஒரு நாடு வீறு பெற்று விளங்குகிறது.

அத்தகைய உணர்வினை உண்டு பண்ணும் என்ற நம்பிக்கையுடன் தான், ஆசிய விளையாட்டுப் போட்டிகளை நமது நாடும் நடத்தி இருக்கிறது.

உன்னதமான இந்த நோக்கம், இந்திய இளைஞர்களுக்கு இடையே இன்று ஏற்பட்டிருக்கிறது என்றால், அதற்கு நம் நாட்டிலே நடைபெற்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்தப் போட்டிகள் தான் காரணமாகும்.

இந்த ஆசிய விளையாட்டுக்கள் இன்று இளைஞர்கள் மனதிலே விதைக்கப்பட்ட எழுச்சிமிக்க விதைகளாகும். இந்த விதைகள் அற்புதமான ஆலமரங்களாக வளரும். வாழ்வு தரும் என்று வல்லுநர்கள் கருத்து உண்மையாகட்டும்.

இந்திய வீரர்கள் வீராங்கனைகள் முயற்சி, எல்லா நாடுகளுக்கும் இணையாக மட்டுமல்ல, மேலாக எழுந்து முழங்கட்டும், முன்னணியிலே நடைபோடட்டும் என்று நாமும் விரும்புகிறோம்.

அத்தகைய உணர்வினை எழுப்பும் என்ற நம்பிக்கையுடன் இந்த நூலை உங்களிடம் படைக்கின்றேன்.

இந்நூல் வெளிவர உதவிய **ஆதாம் சாக்ரட்டிசுக்கும்** அழகுற அச்சிட்ட **கிரேஸ் பிரிண்டர்ஸாருக்கும்** எனது இனிய நன்றி.

அன்புள்ள

ஞானமலர் இல்லம்
சென்னை—17.

எஸ். நவராஜ் செல்லையா
16—1—88

ஆசிய விளையாட்டுக்களின்
அதிர்ஷ்ட சின்னம்
அப்பு



சிறப்புச் சின்னம்
ஜந்தர் மந்தர்

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | ஆசிய விளையாட்டுக்களின் வரலாறு | 9 |
| 2. | முதலாவது ஆசிய விளையாட்டுக்கள் | 22 |
| 3. | இரண்டாவது ஆசிய விளையாட்டுக்கள் | 28 |
| 4. | மூன்றாவது ஆசிய விளையாட்டுக்கள் | 30 |
| 5. | நான்காவது ஆசிய விளையாட்டுக்கள் | 33 |
| 6. | ஐந்தாவது ஆசிய விளையாட்டுக்கள் | 35 |
| 7. | ஆறாவது ஆசிய விளையாட்டுக்கள் | 38 |
| 8. | ஏழாவது ஆசிய விளையாட்டுக்கள் | 40 |
| 9. | எட்டாவது ஆசிய விளையாட்டுக்கள் | 44 |
| 10. | ஒன்பதாவது ஆசிய விளையாட்டுக்கள் | 47 |
| 11. | ஆரம்ப விழாவின் அருமை | 57 |
| 12. | ஜவகர்லால் நேரு ஸ்டேடியம் | 62 |
| 13. | புதிய சாதனைகளில் புரட்சி | 66 |
| 14. | இந்தியாவின் நிலை | 72 |
| 15. | வெற்றியாளர்களும் சாதனைகளும் | 77 |
| 16. | பதக்கங்களின் பட்டியல் ஒரு கண்ணோட்டம் | 86 |
| 17. | நினைவில் நிறைந்த நிறைவு விழா | 90 |
| 18. | சில சுவையான தகவல்கள் | 94 |

# 1

# ஆசிய விளையாட்டுக்களின் வரலாறு

உலக நாடுகள் அனைத்துக்கும் இடையிலே, நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒலிம்பிக் கழகத்தினரால் குறிப்பிட்டுத் தரப்பட்டுள்ள ஓர் இடத்தில் நடைபெறும் புகழ் பெற்ற பந்தயங்களுக்கு ஒலிம்பிக் பந்தயங்கள் என்று பெயர்.

ஆசிய நாடுகளுக்கிடையே, நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை, ஆசிய விளையாட்டுக் கழகத்தினரால், குறிப்பிட்டுத் தரப்பட்டுள்ள ஓர் இடத்தில், நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளுக்கு ஆசிய விளையாட்டுப் போட்டிகள் என்பது பெயராகும்.

இரண்டு போட்டிகளும், நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறுகின்ற போட்டிகள் தான். ஆனால் ஏன் இந்த ஆசிய அளவிலான போட்டிகள் இடம்பெற வேண்டும்? உலக அரங்கில்தான் ஒரு ஒப்பற்ற போட்டி நடைபெறுகின்றதே? தனியாக எதற்கு என்ற ஒரு கேள்வியை நீங்கள் எழுப்பலாம்.

அது நியாயமான கேள்விதான். அதற்கான விடையினைத் தேட வேண்டுமென்றால், நாம் கொஞ்சம் பின்

நோக்கித் திரும்பிப் பார்க்கத்தான் வேண்டும். நேற்றைய நிகழ்ச்சிகள் தாம் இன்றைய வரலாறு என்பார்கள்.

பல நூறு ஆண்டுகளுக்கு முன்னிருந்த, முரசு கொட்டி நடைபெற்ற மாபெறும் நிகழ்ச்சிகளை நினைவு கூர்ந்திடும் போது, உங்கள் கேள்விக்கு, உகந்த விடை தகுந்த முறையிலே கிடைத்து விடும்.

விளையாட்டுப் போட்டிகள் என்றவுடன் நமக்கு உடனே நினைவுக்கு வருவது பண்டைய கிரேக்கம்தான்.

கி. மு. 777ல் தொடங்கப்பட்டு சீரும் சிறப்புமாக நடத்தப்பெற்றன என்று குறிப்பிடப்படும் ஒலிம்பிக் பந்தயங்கள், கி. பி. 394ம் ஆண்டு வரை கோலாகலமாக நடத்தப்பட்டன.

'சீர்கெட்டுப் போய் விட்டன இந்த ஒலிம்பிக் பந்தயங்கள்' என்று சீற்றங் கொண்ட சாம்ராஜ்ய சக்ரவர்த்தி முதலாம் தியோடசிஸ் என்பவன், கி. பி. 394ம் ஆண்டோடு ஒலிம்பிக் பந்தயத்தை நிறுத்தி விட்டான்.

ஆண்மை மிகு அழகுப் போட்டிகளான ஒலிம்பிக் போட்டிகள் 1500 ஆண்டுகளுக்கு மேல் அழிந்தே போயின. ஆங்காங்கே தலைகாட்ட முடியாமல் கூட அமிழ்ந்து கிடந்த ஒலிம்பிக் பந்தயங்களுக்குப் புத்துயிர் கொடுத்து புதுப்பித்துத் தந்தான் பிரெஞ்சுத் தலைமகன் ஒருவன். அவனே பியரி கூபர்டின் பிரபு என்பவன்.

அன்னாரது அரிய முயற்சியால், 1896ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6ந் தேதி, கிரேக்க நாட்டில் உள்ள ஏதென்ஸ் நகரத்தில் முதலாவது புதிய ஒலிம்பிக் பந்தயங்கள் மிகவும் பெருமையுடன் நடத்தப்பட்டன.

உலக நாடுகள் அனைத்தும் பங்கு பெறலாம் என்று அழைப்பு அனுப்பிய போதும், உயிரோட்டமாக வந்து கலந்து கொண்ட நாடுகள் 9 தான்.

அதற்கான காரணங்கள் ஆயிரமாயிரம் இருந்தாலும், மிக முக்கியமான காரணங்களும் இருக்கத்தான் இருந்தன.

ஆர்வமுடன் கலந்து கொண்ட நாடுகள் அமெரிக்கா, இங்கிலாந்து, ஸ்வீடன், ஸ்பெயின், இத்தாலி, பெல்ஜியம், நார்வே, கிரேக்கம், பிரான்சு போன்ற ஒன்பது நாடுகள். 1900ம் ஆண்டு 16 நாடுகள். 1904ம் ஆண்டு 17 நாடுகள்.

ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்ற இடமோ கிரேக்கத்தில் தொடங்கி, பிரான்ஸ், அமெரிக்கா, இங்கிலாந்து, ஸ்வீடன், ஜெர்மனி, பெல்ஜியம், ஹாலந்து, என்று மேலை நாடுகளில்தான் மேன்மையுற நடத்தப்பட்டன.

கீழை நாடுகள் என்றால் ஏழை நாடுகள் என்று தான் பொருளோ என்னவோ! ஆசிய நாடுகளிலிருந்து ஆர்வமுடன் பங்கு பெறும் நாடுகள் இல்லாமலே போயின. அதற்குரிய காரணங்களை அறிஞர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்.

மேலை நாடுகளுக்குப் பயணம் செய்து. போட்டியிடப் போய் வருகின்ற அளவுக்கு கீழை நாடுகளில் பொருளாதார வசதி இல்லாமலிருந்தது முதற் காரணம்! 'பொருள் இல்லார்க்கு இவ்வுலகமில்லை' என்பார்களே! உலகமே இல்லை என்றால், பொல்லாத இந்தப் போட்டிகளுக்கு எப்படித் தான் போய் வருவது? எப்படித்தான் பங்கு பெறுவது?

மேலை நாட்டு மக்கள் இயற்கையிலேயே வசதி நிறைந்தவர்கள். வாளிப்பு மிக்கவர்கள். வாட்டசாட்டமான தேக அமைப்பு கொண்டவர்கள். அவர்களுக்கோ தனிப்பட்ட ஆர்வமும், அதனைப் பெருக்கிக் கொள்ள நவீனவசதி முறைகளும், நுண்திறன் வாய்ந்த பயிற்சி தரும் பேரறிஞர்களும் இருந்தனர்.

அதனால் அவர்களால் எளிதாக வெற்றி பெற்றுக் கொள்ள முடிந்தது. எதிர்ப்பும் அவர்களுக்குள்ளே தான்

இருந்தன. இன்னும் இருக்கின்றன. அவர்கள் சாதனை யையும் நமது சாதனையையும் ஒப்பிட்டுப் பார்த்தாலே உண்மை விளங்கிடும்,

அத்துடன் அல்லாமல், கீழை நாடுகள் மத்தியிலே அரசின் சார்பிலே, மக்களிடையே விளையாட்டு மற்றும் ஆர்வமோ அக்கரையோ இல்லவே இல்லை.

பொருளாதார வசதியோ, நவீன பயிற்சி சாதனங் களோ, ஊக்கம் தரும் உறவோ, அரசோ, பொது மக்களோ, இல்லாமல் எவ்வாறு விளையாட்டுக்களிலே, திறமைகளிலே முன்னேற முடியும்? போட்டியிட முடியும்?

இத்தகைய காரணங்களினால் தான் கீழை தேசத்து நாடுகளால், மேலை நாடுகள் பங்கு பெறும் ஒலிம்பிக் பந்தயங் களில் கலந்து கொள்ள முடியவில்லை என்ற காரணங்கள் பொருந்தும்படியாகத்தான் உள்ளன.

வசதிகள் இல்லை என்பதற்காக, வாய்ப்புக்களை இழந்து விடுவது என்பது வல்லவர்களுக்கு அழகல்லவே! வாய்ப்புக் களை உண்டு பண்ணி வாகை சூடுவது தான் வெற்றி வீரர் களுக்கு அழகு என்பதை, விஷயம் தெரிந்தவர்கள் வீறு கொண்டு எழுந்த முயற்சியின் காரணமாகத்தான், இந்த ஆசிய விளையாட்டுப் போட்டிகள் அகிலத்திலே உரு வெடுத்தன.

இது போன்ற ஏற்றமிகு விழிப்புணர்ச்சி முனைப்புடன் தோன்றிய நாடு, முதன் முதலாக என்ற பெருமையை உடைய நாடு என்று போற்றப்படுவது பிலிப்பைன்ஸ் என்று தான் வரலாறு கூறுகின்றது.

1913ம் ஆண்டிலே தான், ஆசியாவில் ஆசிய நாடு களுக்கிடையிலே போட்டிகள் நடத்தலாம் என்ற யோசனை யைக் கூறி, அதற்கான ஆக்க வேலைகளிலும் அதிதீவிர மாக ஈடுபட்டது. பிலிப்பைன்ஸ் நாடு.

விளையாட்டுப் போட்டிகளை நடத்த வேண்டும் என்று முடிவு கட்டிக் கொண்டு ஆரம்பித்த போது, முன்னுக்கு வந்த நாடுகள் மூன்றே மூன்று. அந்தப் புகழுக்குரிய நாடுகள் : ஜப்பான், சைனு, பிலிப்பைன்ஸ்.

இந்த மூன்று நாடுகளுக்கிடையே நடை பெற்ற போட்டிகள் 1913ம் ஆண்டு, மணிலா நகரிலே அற்புதமாக அரங் கேறின. அப்பொழுது இந்தப் போட்டிகளுக்கு இட்டிருந்த பெயர் 'தொலை கிழக்கு நாடுகளின் விளையாட்டுப் போட்டிகள்' என்பதாகும். (Far Eastern Championship Games).

இந்தப் போட்டிகளில் 7 நிகழ்ச்சிகளில் போட்டிகள் நடை பெற்றன. அதாவது கால் பந்தாட்டம், கைப் பந்தாட்டம், மென் பந்தாட்டம், கூடைப் பந்தாட்டம், டென்னிஸ், நீச்சல் மற்றும் ஓடுகளப் போட்டிகள் ஆகும். இந்த முதன்மைப் போட்டிகளில், பிலிப்பைன்ஸ் நாட்டு வீரர்கள் தான் பெரும்பாலான வெற்றிகளையும், பதக்கங் களையும் வென்று புகழ்மாலை சூடினர்கள்.

1915ம் ஆண்டு இதே மூன்று நாடுகளுக்கிடையே யான போட்டிகள் சீனுவில் உள்ள சாங்கை (Shanghai) என்னும் நகரில் நடை பெற்றன.

இதுபோலவே, இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மாற்றி மாற்றி இந்த மூன்று நாடுகளுக்கிடையேதான் போட் டிகள் நடந்து வந்தன. இதிலே குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றுல், எந்த நாட்டில் போட்டிகள் நடக்கின்றன வோ, அந்த நாட்டு வீரர்களே அதிக அளவில் வென்று கொண்டிருந்தார்கள்.

இப்படியாக, இந்த 'வெற்றிக்கதை' 1927ம் ஆண்டுவரை மணிலா, சாங்கை, டோக்கியோ, ஓசாக்கோ என்கின்ற இடங் களில் தான் தொடர்ந்து நடத்தப்பட்டு வந்தன.

1921ம் ஆண்டில் சீனுவில் ஒருமுறை இந்த போட்டிகள் நடைபெற்ற போது, நமது இந்திய நாட்டிற்கும் 'இந்தக் கீழை நாட்டு விளையாட்டிப் போட்டியின் குழு, வந்து கலந்து கொள்ள வேண்டுமென்ற அழைப்பினை விடுத்திருந்தது.

ஆனல் அன்றைய சூழ்நிலையில், அதிக தூரம் போய் போட்டிகளில் கலந்து கொள்ள முடியாத பொருளாதார நெருக்கடியின் காரணமாக, இந்தியாவினுல் சென்று கலந்து கொள்ள முடியவில்லை.

கனிந்து வரும் காலத்திற்காக, இந்தியா காத்துக் கொண்டிருந்தது போலும், 1930 ஆண்டு ஜப்பான் நாட்டிலுள்ள டோக்கியோவில் போட்டிகள் நடைபெற்றபோது, இந்தியா (நான்காவது நாடாக) கலந்து கொண்டது.

இந்தப் போட்டிகளின் போதுதான் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் காலத்தை மாற்றியமைக்கின்ற புதிய விதிமுறை ஒன்று புகுத்தப்பட்டது. அதாவது, இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறுகின்ற இந்தப் போட்டியை, நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் நடத்த வேண்டும். அதாவது, ஒலிம்பிக் பந்தயங்கள் போன்ற அமைப்பிலும் விதிமுறைகளிலும் இருக்க வேண்டும் என்பதாக முடிவு செய்யப்பட்டது.

தொலைகிழக்கு நாட்டு விளையாட்டுப் போட்டிகள் என்ற பெயரில் மணிலாவில் நடந்த போட்டியே கடைசிப் போட்டியாக அமைந்தது. இந்தப் போட்டியில் 5 வது நாடாக இந்தோனேஷியாவும் கலந்து கொண்டது.

193௧ம் ஆண்டு தொலை கிழக்கு நாடுகளில் ஆசிய விளையாட்டுப் போட்டிகள் டோக்கியோ நகரில் நடைபெறுவதாக இருந்தது, ஆனல், முதல் உலக மகா யுத்தத்தின் போர் மூட்டம் மிகக் கடுமையாக உலகெங்கும் பரவி இருந்த

தன் காரணமாக, விளையாட்டுப் போட்டிகள் நடைபெறாமலே போயின.

அதற்குள் தொலை கிழக்கு நாடுகளிடையே நடக்கும் போட்டிகள் என்ற பெயர் மாற்றம் பெற்று, கீழ்த்திசை நாடுகளின் விளையாட்டுப் போட்டிகள் (Orient Championship Games) எனும் புதுப் பெயர் சூட்டப்பட்டிருந்தது.

இந்தத் தருணத்தில் தான் மற்றொரு வகையான ஆசிய நாடுகளுக்கிடையேயான போட்டிகள் துவங்குகின்ற அமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டிருந்தது. அதற்கு 'மேல் திசை ஆசிய நாடுகளின் விளையாட்டுப் போட்டிகள்' என்று பெயர் சூட்டப்பட்டிருந்தது.

இத்தகைய போட்டி ஒன்று 1934ம் ஆண்டு டெல்லியில் நடைபெற்று, அதற்கு காரண கர்த்தவாக விளங்கியவர் ஜி. டி. சோந்தி என்பவர்.

மேல்திசை ஆசிய நாடுகளின் விளையாட்டுப் போட்டிகள் எனும் பெயரில் நடைபெற்ற போட்டிகளுக்கு மூலக்காரணமாக அமைந்த திரு. குருதத் சோந்தி என்பவர், அன்றைய இந்திய ஒலிம்பிக் கழகத்தின் செயலாளர் ஆவார்.

ஆசியா கண்டத்திலே உள்ள, மிகவும் பின் தங்கிய நாடுகளுக்கு இடையே விளையாட்டுப் போட்டிகள் நடைபெற வேண்டும் என்று அவர் அதிகமாகவே விரும்பினர். பாட்டியாலா மகாராஜாவான அவர் ஆசைப்பட்டது உண்மையாகவே நடந்துவிட்டது.

இந்தப் போட்டிகள் டெல்லி மாநகரில் நடைபெற்றன. இந்தியா, ஆப்கானிஸ்தானம், இலங்கை பாலஸ்தீனம் ஆகிய நான்கு நாடுகளே பங்கு கொண்டன. அந்தப் போட்டிகளில் இந்தியாவானது 19 தங்கப் பதக்கங்களையும் 13 வெள்ளிப் பதக்கங்களையும் வென்று பெரும் புகழ் சேர்த்தது.

அடுத்த நான்காவது ஆண்டான 1938ம் ஆண்டில், டெல்அவிவ் எனும் நகரில் இரண்டாவது மேல்திசை ஆசிய நாடுகளின் போட்டிகள் நடைபெறுவதாக, இருந்ததானது, போர்க் காரணமாகக் கைவிடப்பட்டது.

விளையாட்டுப் போட்டிகளை நடத்த இயலாது என்பதால் தான் விடப்பட்டதே தவிர, தொடர்ந்து ஆசிய நாடுகளுக் கான விளையாட்டுக்கள் நடத்தப்பட வேண்டும் என்ற நினைவு தம்மை, கிஞ்சித்தேனும் யாரும் இழந்தார்கள் இல்லை. அந்த ஓர் அரிய சூழ்நிலைக்காக அத்தகைய ஆர்வம் கொண்ட சோந்தி அவர்கள், ஏறத்தாழ 9 ஆண்டுகள் காத்திருக்க வேண்டியதாயிற்று. அதற்காக அவர் காலம்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தார். அதற்கேற்றவாறு ஒரு நல்ல சூழ்நிலையும் உருவாகியிருந்தது.

1947ம் ஆண்டில் டெல்லி தலைநகரில் ஆசிய நாடுகள் உறவு பற்றிய மாநாடு நடைபெற்றது. அந்தக் கருத்தரங்கின் போது, திரு. ஜி. டி. சோந்தி அவர்கள், ஆசிய நாடுகளுக்கு என்று தனியாக விளையாட்டுப் போட்டிகள் இருக்க வேண்டும் என்ற அவசியத்தை வற்புறுத்தி, ஒரு சுற்றறிக்கையை வெளி யிட்டு வைத்தார்.

அவரது கருத்தை அனைவரும் ஆமோதித்தனர். ஏற்றுக் கொண்ட கருத்திற்கு ஏற்ப செயல்படவும் தொடங்கி விட்டனர். அப்பொழுது நமது திருநாட்டின் பாரதப் பிரத மராக விளங்கிய ஆசிய ஜோதி ஜவகர்லால் நேரு அவர்கள், அரிய யோசனை ஒன்றை வெளியிட்டார்.

வெஸ்டர்ன் ஏஷியாடிக் கேம்ஸ் என்ற பெயரை மாற்றி விட்டு, Asian Games என்ற பெயரை நேருஜி கூறியவுடன் அனைவரும் ஏற்றுக் கொண்டனர். அன்றிலிருந்து ஆசிய விளையாட்டுக்கள் என்றே நிலவி வருகிறது.

தொலை கிழக்கு ஆசிய நாடுகளின் விளையாட்டுக்கள், மேலை ஆசிய நாடுகளின் ஒரே அமைப்பாக உருவாக வேண்டும் என்ற முயற்சிகள் தீவிரமாக செயல்படத் தொடங்கின. அதை Pan Asian Games என்று அழைக்கப் பட வேண்டும். அல்லது அழைக்கலாம் என்று முயன்ற முயற்சிகள் கூட தோற்றுப் போய், தொய்ந்த நிலையிலிருந்தது.

அப்பொழுதுதான் 1948ம் ஆண்டு, லண்டன் மாநகரில் 14 வது ஒலிம்பிக் பந்தயங்கள் நடைபெற்றன. அந்த அரிய தருணத்தை ஆசிய நாடுகளின் பிரதிநிதிகள் மிக அற்புதமான முறையிலே பயன்படுத்திக் கொண்டனர்.

இந்தியாவின் பிரதிநிதியாக சென்றிருந்த சோந்தி அவர்கள், லண்டனில் உள்ள மவுண்ட்ராயல் ஓட்டலுக்கு ஆசிய நாடுகளின் பிரதிநிதிகளை விருந்துக்கு அழைத்திருந்தார். இங்கே, ஆசிய நாடுகளுக்கான போட்டிகள்பற்றிய தமது கருத்தை மீண்டும் வலியுறுத்திக் கூறினார்.

அங்கிருந்த பிலிப்பைன்ஸ் நாட்டுக்காரரான ஜார்ஜ் B வர்காஸ் என்பவர், சோந்தியின் கருத்தை தீவிரமாக ஆதரித்துப் பேசினார். அவரைத் தொடர்ந்து சீனா, கொரியா, பர்மா, இந்தோனேஷியாவைச் சேர்ந்த அனைத்துப் பிரதிநிதிகளும், இப்படி ஓர் அமைப்பை ஏற்படுத்தியே ஆக வேண்டும் என்ற தங்களது தீர்மானக் கோரிக்கையை தெளிவுடன் கூறி ஆதரவு தந்தனர்.

ஒலிம்பிக் பந்தயங்களில் பங்கு பெற வந்த ஆசிய நாடுகளின் மேலாளர்கள் ஒன்று கூடி, அருமையான ஓர் அமைப்பை உருவாக்க முனைந்தனர். அதில் முடக்கமே இடைபுகாதவாறு வெற்றியும் பெற்றனர்.

ஆசிய நாடுகளுக்கிடையே அன்பையும், நட்பையும், ஆன்ற ஒத்துழைப்பையும், நல்லுறவையும் வளர்ப்பதற்காக

ஆசிய விளையாட்டுக்கழகம் ஒன்று வேண்டும் என்ற அவசியத்தை வற்புறுத்தி அவர்கள் அமைத்த கழகத்தின் சட்ட திட்டங்களை உருவாக்க, ஒரு துணைக்குழு உருவாக்கப்பட்டது.

சீனாவைச் சேர்ந்த கன்சன்ஹோ, கொரியாவைச் சேர்ந்த K. C. ஷின்; இந்தியரான சோந்தி; பிலிப்பைன்ஸ் நாட்டினரான வர்காஸ், மற்றும் பார்த்தலோன் ஆகிய ஐவரடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டது.

அந்தத் துணைக்குழு ஆக்கித் தந்திருந்த விதிமுறைகள் மற்றும் தீர்மானங்களை பற்றி இங்கே காண்போம்.

ஆசிய விளையாட்டுக் கழகத்திற்கான ஆக்கபூர்வமான அமைப்பு விதிகளை உருவாக்கித் தரும் பொறுப்பை, ஒரு துணை குழுவிடம் ஒப்படைக்கப்பட்டு அந்தக் குழுவினரும் மிகவும் அரிதின் முயன்று கீழ்க்காணும் செயல் விதிமுறைகளை ஆக்கித் தந்தனர்.

1. ஆசிய விளையாட்டுக் கழகம் ஒன்றை விரைவில் அமைத்திட வேண்டும்.

2. அகில உலக அளவில் ஒலிம்பிக் பந்தயங்கள் 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படுவது போலவே, ஆசிய விளையாட்டுப் போட்டிகளும், நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை, அதாவது 1950ம் ஆண்டிலிருந்து நடத்தப்பட வேண்டும்.

3. தனித்திறன் போட்டிகள், நீச்சல், டென்னிஸ், தளப் பந்தாட்டம், வளைகோல் பந்தாட்டம், கூடைப் பந்தாட்டம் கைப்பந்தாட்டம், கால் பந்தாட்டம், குத்துச் சண்டை, மல்யுத்தம் போன்ற போட்டிகளை நடத்த வேண்டும்.

4. 1949ம் ஆண்டில் இந்தியாவில் நடைபெறுகின்ற விளையாட்டுப் போட்டிகள் (Invitation Meet) சமயத்தில்,

அறிந்தப் பொதுக்குழு கூட்டம் கூடி முடிவு எடுக்க வேண்டும்.

இப்படியாகத் துணைக்குழு தந்த அறிக்கையின் படி, 1949ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13ந் தேதி புதுடெல்லியில், வரலாற்றுச் சிறப்புமிக்கக் கூட்டமானது நடைபெற்றது.

அக்கூட்டத்திற்கு வந்திருந்த அனைத்து நாட்டுப் பிரதி நிதிகளும், ஒலிம்பிக் பந்தயப் போட்டி அமைப்பினைப் போலவே, ஆசிய நாடுகளுக்கிடையே போட்டிகள் நடத்து வதற்காக, ஏகமனதாக ஏற்றுக் கொண்டார்கள்.

அதற்குப் பிறகு அமைந்த இந்த ஆசிய விளையாட்டுக் கழகமானது, ஐரோப்பிய விளையாட்டுக் கழகம், தென் அமெ ரிக்க விளையாட்டுக்கழகம் என்பனவற்றின் அமைப்பிலே, புதிய பிறப்பெடுத்துக் கொண்டது.

இவ்வாறு அமைக்கப் பெற்ற ஆசிய விளையாட்டுக் கழகத் திலே, முதன் முறையாக 5 நாட்டுப் பிரதிநிதிகள் உறுப்பினர் களாயினர். அத்தகைய பெருமை பெற்ற நாடுகள் ஆப்கானி ஸ்தானம், பர்மா, இந்தியா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ் ஆகும்.

அதன் பின், சிலோன், இந்தோனேஷியா நேபாளம் சியாம் முதலிய நாடுகள் ஒப்புதல் குறிப்பில் கையெழுத்திட்டு உறுப்பினர் நாடுகளாகத் தொடர்ந்தன.

1949ம் ஆண்டு முதல் ஆசிய விளையாட்டுப்போட்டிகளை இந்தியாவில் நடத்துவதென்று முடிவெடுக்கப்பட்டது. அதா வது 1950ம் ஆண்டில் நடைபெற வேண்டும் என்பதாக.

ஆனால், ஓராண்டுகாலக் கட்டத்திற்குள்ளே ஆசிய கண்டத்திலிருந்து வருகின்ற நாடுகளிடையே நடைபெறும் போட்டிகளை, அகில உலக விளையாட்டு விதிமுறைகளுக்கேற்ப

நடத்திட வேண்டும் என்றால் அது என்ன சாத்தியமான காரியமா என்ன ?

நடத்திட வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டு நாடுகளை கூட்டி முடிவினை எடுத்தபிறகு, முடியாது என்று ஒதுங்குவது எத்தகைய இழிநிலைக்கு இட்டுச் சென்றுவிடும் ?

அதுவும் விருந்துபசாரத்திற்கு பெருமை பெற்ற இந்திய நாட்டில் முடியாமல் போகுமா என்ன ?

ஓராண்டிற்குள் இயலாது என்பதைக் கூறி விட்டு, இன்னும் ஓராண்டுகாலம் தவணை கேட்டு, 1951ல் விளையாட்டுப் போட்டிகளை நடத்திட முன்வந்தனர், இந்தியாவின் ஆசிய விளையாட்டுப் போட்டிக் குழுவினர்.

அதன்படி, 1951ம் ஆண்டு, முதல் ஆசிய விளையாட்டுப் போட்டிகள் இந்தியத் தலைநகராம் தில்லி மாநகரில் வெகு விமரிசையாக நடத்தப்பட்டன.

1951லே முதல் ஆசிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றாலும், 1954ம் ஆண்டிலே இரண்டாவது போட்டிகள் நடத்தப் பெற்றன, இனி நடைபெற்ற 8 ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் இடங்களைக் காண்போம்.

இந்தியாவில் இரண்டாவது தடவையாக நடைபெற இருக்கும் இந்தப் போட்டிகளை நடத்த விடாமல் எத்தனையோ எதிர்ப்புச் சக்திகள் பேயாட்டம் போட்டனவே ! அதிகாரத்திலிருந்து கொண்டே ஆங்காரக் குரல் போட்டனவே ! பணம் விரயம் என்று பாடாய் படுத்தினவே ! எல்லாம் மாறிப் போனதை நாமும் அறிவோமல்லவா !

பட்டியலை நாம் பார்க்கும்பொழுது, அதிக முறைகள் ஆசிய விளையாட்டுப் போட்டிகளை நடத்திய பெருமையை தாய்லாந்து நாடு பெற்றிருக்கிறது.

1970-ல் தென் கொரியாவில் நடைபெற வேண்டிய 6வது ஆசிய விளையாட்டுப் போட்டிகள், அந்த நாட்டின் இயலாமையின் காரணமாக, 1966ல் நடைபெற்ற 5வது போட்டிகள் நடந்த பாங்காக்கிலே மீண்டும் நடத்தப் பெற்றன.

அதுபோலவே, பாகிஸ்தானும், 1978ம் ஆண்டு, இஸ்லாமையாத்தில் 7வது ஆசிய விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதாகக் கேட்டுப் பெற்று, கடைசியில் முடியாது என்று கைகளை விரித்து விட்டது,

எப்பொழுதும் தயார் நிலையில் இருக்கின்ற தாய்லாந்து நாடும், மூன்றாவது முறையாக முன்னே வந்து, இந்தப் போட்டிகளை நடத்திக் கை கொடுத்து, கௌரவத்தைக் காப்பாற்றியது.

இவ்வாறு எட்டு முறை நடத்தப்பெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகள், 31 ஆண்டுகள் கழித்து மீண்டும் இந்தியாவில் நடை பெற்றன.

| எண் | ஆண்டு | நடந்த இடம் | நாடு |
|---|---|---|---|
| 1. | 1951 | தில்லி | இந்தியா |
| 2. | 1954 | மணிலா | பிலிப்பைன்ஸ் |
| 3. | 1958 | டோக்கியோ | ஜப்பான் |
| 4. | 1962 | ஜகார்தா | இந்தோனேஷியா |
| 5. | 1966 | பாங்காக் | தாய்லாந்து |
| 6. | 1970 | பாங்காக் | தாய்லாந்து |
| 7. | 1974 | டெஹ்ரான் | ஈரான் |
| 8. | 1978 | பாங்காக் | தாய்லாந்து |
| 9. | 1982 | தில்லி | இந்தியா |

# 2

# முதலாவது ஆசிய விளையாட்டுக்கள்

இரண்டாவது முறையாக இந்தியாவிலே ஒன்பதாவது ஆசிய விளையாட்டுக்கள், 1982, நம்வபர் 19ந் தேதி மிகவும் விமரிசையாக ஆரம்பமாயின. என்பதை நீங்கள் அறிவீர்கள்.

இன்று எந்த அளவில் ஏற்றமும் எழுச்சியும், ஓங்கிய உயர்வு பெற்ற உற்சாகத்துடனும் விழா நடத்தும் முயற்சியில் ஈடுப்பட்டிருந்தோம் என்பதை நீங்கள் ரேடியோ, தொலைக் காட்சி மற்றும் பத்திரிக்கைகளில் கேட்டும் கண்டும் படித்தும் மகிழ்ந்திருப்பீர்கள்.

இதே உற்சாகமும் உழைப்பும், முதன் முறையாக நடத்திய முதலாவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளிலும் இருந்தன என்றால், அதையும் நாம் அறிந்து கொள்ள வேண்டாமா ?

1951ம் ஆண்டு, இந்தியத் தலைநகராம் தில்லி மாநகரத்திலே, மார்ச்சு மாதம் 4ந் தேதி முதல் 11ந் தேதி வரை, அதாவது 8 நாட்கள் நடைபெற்று முடிந்தன.

ஆப்கானிஸ்தானம், பர்மா, சிலோன், இரான், இந்தோனேஷியா, ஜப்பான், நேபாளம், பிலிப்பைன்ஸ்,

சிங்கப்பூர், தாய்லாந்து, இந்தியா ஆகிய 11 நாடுகள் பரபரப்புடன் பங்கேற்று மகிழ்ந்தன.

தனித்திறன் போட்டிகள், நீச்சல் போட்டிகள். எடை தூக்கும் போட்டிகள், கூடைப் பந்தாட்டம், சைக்கிள் போட்டிகள், கால் பந்தாட்டம் என 6 பிரிவுகளில் மட்டுமே போட்டிகள் நடத்தப்பட்டன.

இந்தப் போட்டிகளில் 491 விளையாட்டு வீரர்கள் (இதில் 24 பெண்கள் உட்பட) கலந்து கொண்டனர். கலந்து கொண்ட வீராங்கனைகளும் தனித்திறன் போட்டிகளில் மட்டுமே போட்டியிட்டனர் என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இந்தியாவிலிருந்து 152; ஜப்பான் 72; பர்மா 58; ஆப்கானிஸ்தானம் 39; இரான் 37; பிலிப்பைன்ஸ் 28; சிங்கப்பூர் 22; தாய்லாந்து 17; நேபாளம் 6; சிலோன் 3. என்ற எண்ணிக்கையில் வீரர்கள் வந்து போட்டியில் ஈடுபட்டனர்.

விமரிசையான விளையாட்டு விழாவினை தொடங்கி வைக்கும் சிறப்பான பொறுப்பில் அந்நாள் இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் இராஜேந்திர பிரசாத் அவர்கள் இருந்தார்கள்.

மார்ச்சு 4ந் தேதி மாலை சரியாக 4 15 மணிக்கு 'இந்தியாவில் நடைபெறும் முதலாம் ஆசிய விளையாட்டுக்களைத் தொடங்கி வைக்கிறேன்' என்று கூறி, தலைவர் விழாவைத் தொடங்கி வைத்தார்.

இந்தப் பேரெழுச்சி மிகுந்த கையொலிகளுக்கு இடையே, அந்நாள் பிரதமர் நேரு அவர்களின் உணர்ச்சிமிக்க வாசகம் ஒன்று விளையாட்டு வீரர்களின், வெற்றி எண்களைக் குறிக்கும் பலகையில் ஒளிமிகும் வண்ண எழுத்துக்களில் பொறிக்கப்பட்டிருந்தன.

''விளையாடுங்கள்! விளையாட்டுக்களை விளையாட்டுப் பெருந் தன்மைக்காக, அதே உற்சாகத்தோடு விளையாடுங்கள்.''

ஓர் அரும்பெருங் கொள்கையாகக் கொடுத்திருந்தார் நேரு அவர்கள். அவரது ஆத்மார்ந்த ஆதரவோடும் ஆற்றல்மிகு ஒத்துழைப் போடும், அறிவார்ந்த அருள்பொருள் உதவியோடும் தான் போட்டிகள் இந்திய மண்ணிலே நடை பெற்றன என்றால் அது மிகையல்ல.

ஆசிய விளையாட்டுப் போட்டிகளுக்கான ஒரு கொடி. அதாவது வெள்ளைத் துணியிலே ஒளிவிடும் சூரியன், அதன் அருகிலே 11 நீல வளையங்கள் ஒன்றையொன்று இணைந்தாற் போல இருக்கும் வண்ணம் உருவாக்கப்பட்ட கொடி—கம்பத் திலே ஏற்றப்பட, அது பட்டொளி வீசிப் பறந்தது.

1924, 1928ம் ஆண்டுகளில் இந்தியாவின் சார்பாக ஒலிம்பிக் பந்தயங்களில் பங்கு பெற்ற தலிப்சிங் என்னும் வீரர். அப்பொழுது அவருக்கு 57 வயதாக இருந்தது. அவர் சூரி யக் கதிரிலிருந்து நெருப்பு உண்டாக்கப்பெற்ற ஆசிய விளை யாட்டு ஒளிப்பந்தத்தை, செங்கோட்டையிலிருந்து ஏந்திக் கொண்டு, போட்டிகள் நடைபெறும் ஓடுகளத்திற்குவர, அந்த இடைப்பட்ட தூரமான 11 மைல்களையும் 59 வீரர்கள் தொட ரோட்டமாகக் கொண்டுவர, ஓடுகளத்தினுள்ளே தலிப்சிங் தீபத்தை ஏந்திவரும் ஒப்பற்றப் பேறினைப் பெற்றுக் கொண்டார்.

பல்கலைக்கழக வீரர்கள், இந்தியா விமானத் துறையில் பணியாற்றிய வீரர்கள் என 59 பேர்கள் இந்த தொட ரோட்டத் தீபம் ஏந்தலில் பங்கு பெற்றாலும், பல்லாயிரக்கணக் கான பார்வையாளர்கள், ரசிகர்கள் மத்தியிலே ஓடி தீபம் ஏற்றும் பாக்கியம் தலிப்சிங்குக்கு மட்டுமே கிடைத்தது. முதல் ஆசிய ஒளி தீபம் ஏந்தி ஏற்றிய வீரர் எனும் புகழையும் பெருமையையும் பெற்றுக் கொண்டார்.

8 நாட்களாக 11 நாடுகளிலிருந்து கலந்து கொண்ட 491 வீரர்கள் வீராங்கனைகளுக்கிடையே நடைபெற்ற கடுமை யான மிகக் கடுமையான போட்டிகளில், ஜப்பான் தான் முதலிடம் பெற்றது.

ஜப்பான் 24 தங்கப்பதக்கங்களும், இந்தியா 16, இரான் 8, சிங்கப்பூர் 5, பிலிப்பைன்ஸ் 4 என்ற கணக்கிலும் வென்று சிறப்பு நிலை பெற்றன.

இதில் குறிப்பிடத்தக்க சிறப்பு அம்சம் என்னவென்றால், இரான் நாட்டைச் சேர்ந்த N. நமோஜன் எனும் வீரர் 700 பவுண்டு எடையைத் தூக்கி, உலக சாதனையை நிகழ்த்தி யதும், இரான் எடைத்தூக்கும் போட்டிக்காக இருந்த 7 தங்கப் பதக்கங்களையும் அந்த நாடு வென்று எடுத்துக் கொண்டது தான்.

விழா நாளன்று, அதாவது போட்டிகளின் இறுதி நாளன்று, நேரு அவர்கள் தலைமை தாங்கினார்கள். ஒலிம்பிக் பாணியில் நடைபெற்ற அணி வகுப்பு மற்றும் அணி நடையினை மற்றும் மரியாதையினையும் நேரு ஏற்றுக் கொண்டு பாராட்டினார்கள்.

ஆசிய கொடியானது இறக்கப் பெற்றதும், பத்திரமாகப் பாதுகாத்து, மணிலாவில் நடைபெறவிருக்கும் போட்டிக்குத் தருமாறு தில்லி நகர கமிஷனரிடம் கொடுக்கப்பட்டது.

பாட்டியாலா மகாராஜா திரு.யஷ்வேந்திரசிங் அவர்கள், 'விளையாட்டுப் போட்டிகள் முடிவுற்றன' என்று தந்த அறிவிப் பிற்குப் பின்னர், முதலாவது ஆசிய விளையாட்டுப் போட் டிகள் நிறைவு பெற்றன.

முதலாவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளை வெற்றிகர மாக நடத்திட அரும்பாடுபட்டவர்களில் ஆசிய ஜோதியாம்

நேரு அவர்களும் தலையாயவர் ஆவார். அவருடன் முதலாம் ஆசிய விளையாட்டுப் போட்டிக்கான அமைப்புக் குழுவின் தலைவர் யஷ்வேந்திரசிங்; இயக்குநர் A. S. டிமெல்லோ; O. P. செகால்; இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதியாக ஒலிம்பிக் குழுவில் இருந்த G. D. சோந்தி மற்றும் திருமதி பர்லிக் போன்றவர்கள் ஆவார்கள்.

முதலாவது ஆசிய விளையாட்டுக்கள் 1951ம் ஆண்டு மார்ச்சு மாதம் புது டெல்லியில் நடைபெற்றபோது போட்டிகளில் கலந்துகொண்ட நாடுகள் 11. போட்டிகளில் கலந்து கொண்ட வீரர்கள் 491.

### நாடுகளும் வீரர்களும்

| | | | |
|---|---|---|---|
| 1. | இந்தியா | — | 151 |
| 2. | ஜப்பான் | — | 72 |
| 3. | பர்மா | — | 58 |
| 4. | ஆப்கானிஸ்தானம் | — | 39 |
| 5. | இரான் | — | 37 |
| 6. | பிலிப்பைன்ஸ் | — | 28 |
| 7. | சிங்கப்பூர் | — | 20 |
| 8. | தாய்லாந்து | — | 17 |
| 9. | நேபாளம் | — | 10 |
| 10. | சிலோன் | — | 3 |
| 11. | இந்தோனேஷியா | — | 56 |

மொத்த வீரர்களில் 24 பெண்கள்—தனித்திறன் போட்டிகளில் மட்டுமே கலந்து கொண்டு போட்டியிட்டனர்.

ஆறு விளையாட்டுக்களில் மட்டுமே போட்டிகள் நடைபெற்றன. அவை,

1. தனித்திறன் போட்டிகள் (Athletics)
2. கூடைப்பந்தாட்டம்
3. சைக்கிள் போட்டி

4. கால் பந்தாட்டம்
5. நீச்சல் போட்டி
6. எடை தூக்கும் போட்டி

இந்திய வீராங்கனைகள் குறைந்த எண்ணிக்கையில் கலந்து கொண்டாலும், 2 வெள்ளி, 5 வெண்கலப் பதக்கங்கள் வென்றதை இங்கே கட்டாயம் குறிப்பிட்டாக வேண்டும்.

முதல் முறையாக கால்பந்தாட்டத்தில் இந்தியா இரானை வென்று தங்கப்பதக்கத்தைப் பெற்றது. இரண்டாவது முறையாக ஒரு தடவை வென்றாலும், அதன் பிறகு, வெல்லவே இல்லை. அந்த உச்ச நிலைக்கு வரவேயில்லை என்பதையும் இங்கே நாம் குறிப்பிட்டாக வேண்டும்.

'ஆசிய விரைவோட்டக்காரர்' என்ற விருதினை இந்திய வீரரான லெவி பின்டோ என்பவர். 100 மீட்டர், 200 மீட்டர் ஓட்டங்களில் வென்றதன் மூலம் புகழ் பெற்றார்.

இன்னொரு சிறப்பம்சமானது, இரும்புக் குண்டு எறியும் போட்டியில் வெற்றிச் சாதனையை முதலாவது ஆசியப் போட்டிகளிலேயே இந்தியா ஆரம்பித்துக் கொண்டது. இது வரையிலும் தொடர்ந்து வருகிறது. இந்த சாதனை சரித்திரத்தைத் தொடங்கி வைத்தவர் மதன்லால் என்பவராவார்.

## வெற்றிப்பதக்கங்கள் பட்டியல்

| | நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1. | ஜப்பான் | 24 | 20 | 16 | 60 |
| 2. | இந்தியா | 15 | 16 | 21 | 52 |
| 3. | இரான் | 8 | 6 | 2 | 16 |
| 4. | பிலிப்பைன்ஸ் | 5 | 6 | 8 | 19 |
| 5. | சிங்கப்பூர் | 5 | | 2 | 13 |

3

# இரண்டாவது ஆசிய விளையாட்டுக்கள்-1954

இரண்டாவது ஆசிய விளையாட்டுப் போட்டிகள் பிலிப் பைன்ஸ் நாட்டிலுள்ள மணிலா என்னுமிடத்தில் 1954ம் ஆண்டு நடைபெற்றன.

முதல் ஆசிய போட்டிகளில் கலந்து கொண்ட இரானும் நேபாளமும் இதில் பங்கு பெருததால், இந்த 2 நாடுகளுக்குப் பதிலாக 9 புதிய நாடுகள் பங்கு பெற்று கொண்டு பெருமை யைப் பெற்றன.

அவ்வாறு கலந்து கொண்ட நாடுகள்—இஸ்ரேல், ஹாங் காங், மலேயா, வடபோர்னியா, தென் கொரியா, பாகிஸ்தான், வியட்நாம், கம்போடியா, தைவான் மற்றும் ஜப்பான், இந்தியா, பிலிப்பைன்ஸ், சிலோன், இந்தோனேஷியா, ஆப்கானிஸ்தானம், பார்மோசா, சைளு, பர்மா, முதலிய நாடுகள் ஆகும்.

பிலிப்பைன்ஸ் நாட்டின் பிரதமர் ரேமன் மகா சாய் சாய் அவர்கள் விளையாட்டு விழாவைத் தொடங்கி வைக்க, 9 நாட்கள் விமரிசையாக விளையாட்டுப் போட்டிகள் நடை பெற்றன.

தனித்திறன் போட்டிகள், நீச்சல் போட்டிகள், கால் பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், எடைத்தூக்கும் போட்டி, மல்யுத்தம், குத்துச்சண்டை, துப்பாக்கிச் சுடும் போட்டி என்று 8 போட்டிகளுக்கு 1031, வீரர்கள் வீராங்கனைகள் போட்டியிட்டனர்.

மிகச் சிறந்த ஆசிய விரைவோட்டக்காரர் எனும் பட்டத்தை 100 மீட்டர், 200 மீட்டர் ஓட்டங்களில் வென்று புகழ் பெற்றார் பாகிஸ்தானைச் சேர்ந்த அப்துல் காலிக் என்பவர்.

இந்திய வீரர் பர்துமன் சிங் இரும்புக்குண்டு எறிவதில் புதிய சாதனை ஏற்படுத்தி, இந்திய சாதனை வெற்றியை உறுதிப்படுத்திக் காட்டினார்.

இந்தப் போட்டிகளிலும், ஜப்பான் அதிகத் தங்கப் பதக்கங்களை வென்று, தனது தலைமைத் தன்மையை நிலை நாட்டிக் கொண்டது. இரண்டாம் இடம் வகித்த இந்தியா, இந்தப் போட்டிகளில் 4ம் இடத்திற்குத் தள்ளப்பட்டது, நமது திறமையின்மையையே காட்டுகிறது.

## வெற்றிப்பதக்கங்கள் பட்டியல்

| | நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1. | ஜப்பான் | 38 | 34 | 23 | 95 |
| 2. | பிலிப்பைன்ஸ் | 14 | 11 | 12 | 37 |
| 3. | தென்கொரியா | 8 | 5 | 5 | 18 |
| 4. | இந்தியா | 5 | 4 | 8 | 17 |
| 5. | பாகிஸ்தான் | 5 | 6 | 2 | 13 |

4

# மூன்ருவது ஆசிய விளையாட்டுக்கள்-1958

ஜப்பானின் தலைநகரமாக விளங்கும் டோக்கியோ நகரில் மூன்ருவது ஆசிய விளையாட்டுக்கள் 1958ம் ஆண்டு மிக விமரிசையாக நடைபெற்றன.

20 நாடுகள் பங்கு பெற்றன. 1400க்கும் மேற்பட்ட வீரர்களும் வீராங்கனைகளும் 13 நிகழ்ச்சிகளில் வெற்றி பெற போட்டியிட்டனர்.

இந்த விளையாட்டுப் போட்டிகளில், 5 புதிய நிகழ்ச்சிகள் புகுத்தப்பட்டிருந்தன. அவைகள்:- வளைகோல்பந்தாட்டம், சைக்கிள் போட்டி, டென்னிஸ், மேசைப் பந்தாட்டம், கைப் பந்தாட்டம் ஆகும்.

1964ம் ஆண்டு டோக்கியோ நகரில் ஒலிம்பிக் பந்தயங்கள் நடைபெறுவதாக இருந்தன. அதற்கு 6 ஆண்டுகளுக்கு முன்னதாக ஆசிய விளையாட்டுக்கள் நடைபெற இருந்ததால், ஏற்பாடுகள் எல்லாம் ஏராளமான பொருட் செலவில் மிக மிகச் சிறப்பான முறையில் அமைக்கப்பட்டிருந்தன.

ஜப்பனின் பேரரசர் ஹிராஹிடோ அவர்கள் விளையாட்டு விழாவை முறைப்படி திறந்து வைத்து வாழ்த்தினுர்கள்.

பல நிகழ்ச்சிகளில் புதிய சாதனைகள் ஏற்படுத்தப்பட்டன. இந்தியாவின் பறக்கும் சீக்கியர் என்று புகழ்பெற்ற மில்கா சிங், 400 மீட்டர் ஓட்டத்தில் புதிய சாதனையை ஏற்படுத்தினார்.

இந்தியாவின் பர்துமன்சிங் மீண்டும் இந்தப் போட்டியில் இரும்புக்குண்டு எறிவதில் புதிய சாதனை நிகழ்த்தி (15.04மீ) தங்கப்பதக்கத்தை வென்றார்.

முதன் முறையாக வளைகோல் பந்தாட்டம் இந்த விளையாட்டுப் போட்டியில் தான் அறிமுகப்படுத்தப்பட்டது. 1956ம் ஆண்டு மெல்போர்னில் நடந்த ஒலிம்பிக் பந்தயத்தில் பாகிஸ்தானை வென்ற இந்தியா, இந்தப் போட்டியில் வெற்றி பெறாமல் தோற்றுவிட்டது. இந்தத் தோல்வியின் தொடர்ச்சிதான், இந்தியாவை இன்னும் விடாமல் துரத்திக் கொண்டேயிருக்கிறது.

அத்துடன் மட்டுமல்ல; நான்காவது இடத்தை 2வது ஆசியப் போட்டியில் வகித்த இந்தியா, இப்பொழுது 7வது இடத்திற்குத் தள்ளப்பட்டு விட்டது. அதாவது இரான், தைவான், பாகிஸ்தானுக்குப் பின்னால் இந்தியா போனது தான் வேதனையாகும்.

இதோ, வெற்றி நாடுகளின் விவரப்பட்டியல்.

| | நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1. | ஜப்பான் | 67 | 41 | 30 | 138 |
| 2. | பிலிப்பைன்ஸ் | 8 | 19 | 22 | 49 |
| 3. | தென் கொரியா | 8 | 7 | 12 | 27 |
| 4. | இரான் | 7 | 14 | 11 | 32 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5. | தைவான் | 6 | 11 | 17 | 34 |
| 6. | பாகிஸ்தான் | 6 | 11 | 9 | 26 |
| 7. | இந்தியா | 5 | 4 | 4 | 13 |

288 வீரர்கள் வீராங்கனைகள் ஜப்பான் நாட்டின் சார்பாகக் கலந்து கொண்டு, 138 வெற்றிப் பதக்கங்களை வாங்கிக் குவித்துத் தங்கள் தாயகத்திற்குத் தாங்க முடியாத பெரும் புகழை சேர்த்துத் தந்து, தங்கள் நாட்டுப் பற்றினை வெளிக் காட்டிக் கொண்டனர்.

13 பதக்கங்கள் பெற்ற பாரத வீரர்களும் வீராங்கனைகளும் பரிதாபப்பட்டுப்போன கதை, இன்னும் தொடர்ந்து கொண்டுதான் வருகின்றன.

# 5

# நான்காவது ஆசிய விளையாட்டுக்கள் - 1962

நான்காவது ஆசிய விளையாட்டுப் போட்டிகள் 1962 ம் ஆண்டு இந்தோனேஷியாவின் தலைநகரமான ஜாகர்தாவில் நடை பெற்றன.

விளையாட்டில் போட்டிகள் நடைபெறுவதற்கு முன்னதாக, அரசியல் விளையாட்டுக்கள் தனல் பறக்கும் விதத்தில் விளையாடின. அதன் காரணமாக, இஸ்ரேல் நாடும், தைவான் நாடும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பிழந்து போகுமாறு விலக்கப்பட்டன.

இதற்கு மூலைப்பாக இருந்த இந்தோனேஷியாவுடன் இந்தியப் பிரதிநிதி ஜி. சி. சோந்தி அவர்கள் எவ்வளவோ முயற்சித்துப் பார்த்தும் பயனில்லாமல் போனதுடன், இந்தியர்கள் மேல் ஒருவித வெறுப்பினை ஏற்றிக் கொள்ளும் விதங்களின் சூழ்நிலை மாறியிருந்தன.

என்றாலும் விளையாட்டுப் போட்டிகள் வெற்றிகரமாகவே நடத்தப் பெற்றன.

17 நாடுகள் போட்டிகளில் பங்கேற்றன. 12 நிகழ்ச்சிகளில் போட்டிகள் நடைபெற்றன. ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீரர்கள் வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

இந்தோனேஷிய அதிபர் சுகர்னோ, விளையாட்டுப் போட்டி விழாவை, மிகுந்த பாதுகாப்புடன் அரங்கத்திற்கு வந்திருந்து, வாழ்த்தித் தொடங்கி வைத்தார்.

ஆசியாவின் சிறந்த விரைவோட்டக்காரர் எனும் விருதினை இந்தோனேஷியாவின் மருத்துவக் கல்லூரி மாணவர் முகமது சார்ஜன்ட் என்னும் வீரர், 100 மீட்டர் ஓட்டம், 110 மீட்டர் தடைதாண்டும் ஓட்டங்களில் முதலாவதாகவும், 200 மீட்டர் ஓட்டத்தில் மூன்றாவதாகவும் ஓடி அற்புதமான புகழினை அடைந்தார்.

இந்தியாவின் பறக்கும் சீக்கியரான மில்கா சிங் 400 மீட்டர் ஓட்டத்தில் மீண்டும் தங்கப்பதக்கம் வென்றார்.

இரண்டாவது முறையாக கால்பந்தாட்டத்தில் இந்தியா தங்கப்பதக்கத்தை வென்று புகழ் சூடிக் கொண்டது.

ஆனால், மறுமுறையும் வளைகோல்பந்தாட்டத்தில் பாகிஸ்தானிடம் தோற்றுப்போய், தோல்வியை தழுவித் தவித்தது.

என்றாலும் இந்தியாவின் முன்னேற்றம் இதில் இருக்கத்தான் இருந்தது. மூன்றாம் ஆசிய விளையாட்டுப் போட்டியில் ஏழாவது இடத்தில் இருந்த இந்தியா, இதில் மூன்றாவது இடத்திற்கு வந்து நின்றது முன்னேற்றம் தானே!

ஜப்பான் தனது வெற்றிக் கொடியை மீண்டும் விண்ணை வரவும் புகழில் பட்டொளி வீசப் பறக்க விட்டது.

## வெற்றிப் பதக்கங்கள் விவரம் :

| | நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1. | ஜப்பான் | 73 | 56 | 23 | 152 |
| 2. | இந்தோனேஷியா | 11 | 12 | 28 | 51 |
| 3. | இந்தியா | 10 | 14 | 10 | 34 |
| 4. | பாகிஸ்தான் | 8 | 10 | 10 | 28 |
| 5. | பிலிப்பைன்ஸ் | 7 | 6 | 24 | 37 |
| 6. | தென்கொரியா | 4 | 9 | 10 | 23 |
| 7. | தாய்லாந்து | 2 | 6 | 4 | 12 |

# 6

# ஐந்தாவது ஆசிய விளையாட்டுக்கள் - 1966

தாய்லாந்து நாட்டின் தலைநகரமாகிய பாங்காங்கில் ஐந்தாம் ஆசிய விளையாட்டுப் போட்டிகள், மிக அருமையாக 1966ம் ஆண்டில் நடைபெற்றன.

18 நாடுகளிலிருந்து 2000க்கு மேற்பட்ட வீரர்கள் வீராங்கனைகள் வந்து கலந்து கொண்டனர். 14 நிகழ்ச்சிகளில் போட்டிகள் நிகழ்ந்தன.

தாய்லாந்து மன்னர் பூமிபால் அடுலி அடேஜ் அவர்கள் விளையாட்டு விழாவை விமரிசையாகத் தொடங்கி வைத்தார்கள்.

ஆசிய விரைவோட்டக்காரர் என்ற பெருமையை, மலேசியா நாட்டு வீரரான ஜெகதீசன், 100 மீட்டர், 200 மீட்டர் ஓட்டங்களில் தங்கப் பதக்கம் பெற்று, புகழ் பெற்றார்.

இந்திய நாட்டின் வீரர் ஜோகிந்தர்சிங், இரும்புக்குண்டு எறிவதில் புதிய சாதனை நிகழ்த்தி, இந்தியாவின் சிறப்புத்தன்மையை மீண்டும் ஆசியக் கண்டத்திலே உறுதிப்படுத்தினார்.

நான்காவது ஆசியப் போட்டியில் வளைகோல் பந்தாட்டத்தில் தோற்றிருந்த இந்தியா, இந்தப் போட்டியில் பாகிஸ்தானை 1—0 என்ற கணக்கில் வென்று, தங்கப் பதக்கத்தைப் பெற்றது. என்றாலும், ஆசியப் போட்டியில் தங்கம் வெல்லும் அதிர்ஷ்டத்தை இதற்குப் பிறகு இழந்தே போயிருக்கிறது என்பது தான் குறிப்பிடத்தக்க அம்சமாகும். ஆமாம்! 1982 ஆசிய விளையாட்டுக்கள் வரை இந்தியா இந்தப் போட்டியில் வெல்லவே இல்லை.

ஐந்தாம் ஆசிய விளையாட்டுப் போட்டிகளுக்கு நமது நாட்டு வீரர் குழுவை அனுப்பி வைப்பதற்குள்ளாக, இந்திய ஒலிம்பிக் கழகத்திற்கும், அகில இந்திய விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் இடைவிடாமல் தொடர்ந்து நடந்த உட்போட்டிகள் முடிவதற்கே பெரும்பாடாகி, பிறகு இறுதி நிலையில் குழு அனுப்பப்பட்டது. நமது நாட்டின் சகஜமான நிலைமை தானே இது!

அத்தகைய பரபரப்பும் பதட்டமும் மிக்கக் குழுவான இந்திய அணியில் 105 பேர்கள் சென்றிருந்தார்கள். அந்த நிலையிலும், இந்திய அணி, தனது வழக்கமான இடத்தையே பிடித்துக் கொண்டிருந்தது தான் பாராட்டுக்குரியதாகும்.

ஆமாம்! வழக்கம் போல, இந்திய அணி 5வது இடத்தைத் தக்க வைத்துக் கொண்டது.

| | நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1. | ஜப்பான் | 78 | 53 | 33 | 164 |
| 2. | தென்கொரியா | 12 | 18 | 21 | 51 |
| 3. | தாய்லாந்து | 12 | 14 | 11 | 37 |
| 4. | மலேசியா | 7 | 5 | 6 | 18 |
| 5. | இந்தியா | 7 | 3 | 11 | 21 |

ஜப்பான் 5வது முறையாக அதிகப்பதக்கங்களை வென்றது மட்டுமல்ல; ஒவ்வொரு விளையாட்டுப் போட்டியிலும் அதிக எண்ணிக்கையில் தங்கப்பதக்கம் பெறுவதுடன் அடுத்து வரும் நாட்டின் பதக்கங்களுக்கு எட்டாத உயரத்தில் இருப்பது தான் அதன் சிறப்பான பெருமையாக விளங்கி வருகிறது.

பெற்ற வெற்றி இடத்தைப் பெரிதும் காத்து, விடாமல் வெற்றி பெறும் வித்தையை ஜப்பான் எப்படித்தான் கடைப்பிடித்து வருகிறது என்பதை நம்மவர்கள் கண்டறிந்து, பயிற்சி முறையை வேறுபடுத்தி, பலப்படுத்திக் கொள்ளத் தவறிய காரணத்தால். நமது நிலையை விட்டு உயராத நிலைமையை நாம் அடைந்து வருகிறோம்.

# 8

# ஏழாவது ஆசிய விளையாட்டுக்கள்-1974

இதுவரை நடைபெற்ற ஆறு ஆசிய விளையாட்டுப் போட்டிகளும் கிழக்காசிய நாடுகளிலேயே நடைபெற்று வந்தன. மேற்கு ஆசிய நாடுகள் எதுவும் போட்டிகளை நடத்திட இணக்கம் தரவும் இல்லை. மகிழ்ச்சியுடன் முன் வரவும் இல்லை.

அதிக விளையாட்டுப் பற்று மிகுந்த நாடாக விளங்கிய இரான் நாடு, தாமாக முன் வந்து, சம்மதம் தந்து, ஆசியப் போட்டிகளை நடத்திட ஆயத்தமானது.

1974ம் ஆண்டு இரான் தலைநகரான டெஹ்ரான் நகரில், நிறைந்த பொருட்செலவில் நடத்தப்பெற்றன.

25 நாடுகள் போட்டியிட வந்து கலந்து கொண்டன. ஏறத்தாழ 3000 வீரர்கள் வீராங்கனைகள் ஆடுகளங்களிலும் ஓடுகளங்களிலும் தங்கள் திறமையை வெளிப்படுத்தும் போட்டிகளில் வீராவேசமாகக் கலந்து கொண்டனர். 16 நிகழ்ச்சிகளில் போட்டிகள் நடந்தன.

விருந்தூட்டி விளையாட்டு விழா நடத்தும் நாடான இரானிலிருந்து 400 பேர்களும், ஜப்பானிலிருந்து 370 ம், சீனாவிலிருந்து 274 பேர்களும் கலந்து கொண்டனர்.

அதாவது ஆசிய விளையாட்டுக்களில் சீன நாட்டின் முதல் பிரவேசம் இதுதான். தைவான் நாடு விலகிக் கொண்டது. இஸ்ரேல் நாட்டுக்கு இதுவே கடைசி வாய்ப்பாகவும் அமைந்தது.

இரான் மன்னர் ஷா அவர்கள் விளையாட்டுப் பந்தயங்களைத் துவக்கி வைத்தார்.

அனாட் ரத்னபால் எனும் தாய்லாந்து வீரர், 'ஆசியாவின் சிறந்த விரைவோட்டக்காரர்' எனும் புகழினைப் பெற்றார்.

இஸ்ரேலிய நாட்டு வீராங்கனை எஸ்தர்ராட். போட்டிகள் நடக்கின்ற நாட்களில் இரண்டு மாதக் குழந்தை ஒன்றுக்குத் தாய் அவள். என்றாலும், 'பிரசவத்தால் தேக பலமும் மனோபலமும் குன்றிப் போகாது, குறைந்தும் போகாது' என்று நிரூபிப்பதுப் போல, ஒரு சாதனையை சாதித்துக் காட்டினாள்.

அதாவது, 100 மீட்டர் ஓட்டம், 200 மீட்டர் ஓட்டம், 100 மீட்டர் தடை தாண்டி ஓட்டம் ஆகிய மூன்றிலும் முதலாவதாக வந்து, தங்கப் பதக்கம் பெற்று, உலகையே வியப்பில் ஆழ்த்தினாள். சிறந்த ஆசிய வீராங்கனை எனும் பட்டத்தையும் பெற்றாள்.

இந்திய வீரர் T. C. யோகண்ணன், 8.07 மீட்டர் தூரம் தாண்டி, நீளத் தாண்டும் போட்டியில் பிரமாதமான ஆசிய சாதனையை நிகழ்த்திக் காட்டினார்.

ஆனால் எதிர்பார்த்தது போலவே, இந்தியா வளைகோல் பந்தாட்டத்தில் பாகிஸ்தானிடம் தோற்றது. இரண்டு முறை கைப் பந்தாட்டத்தில் வெற்றி பெற்ற நமது நாடு, கால் பந்தாட்டத்தில் முதல் சுற்றுப் போட்டியிலேயே கனவுலாற்றை முடித்துக் கொண்டது.

றக்கும் சீக்கியர் என்று புகழ் பெற்ற மில்காசிங் 400-மீட்டர் விரைவோட்டத்தில
புதிய சாதனை நிகழ்த்திய போது ஓடிய காட்சி.



இரானிய வீரர்கள் மிகச் சிறப்பாகத் தங்கள் தாயகப் புகழுக்காக உழைத்தார்கள்.

இந்திய வீரர்களின் வேகமும் எழுச்சியும் வெற்றி பெறுகின்ற வாய்ப்பினைத் தராத அளவிலேயே சுழன்று கொண்டு விட்டன.

புதிதாக ஆசிய விளையாட்டில் பங்கு பெற்ற சீனு, ஜப்பானின் தலைமை ஆதிக்கத்தை அசைத்து வீழ்த்துவது போன்ற வேகத்தில் நடைபோட்டது. இரானின் முயற்சியும், சீனாவின் சாகசமும் ஜப்பானை வீழ்த்தவோ தாழ்த்தவோ முடியவில்லை.

வழக்கம் போல ஜப்பான் முதன்மை பெற்றது. வழக்கம் போல இந்தியாவும் தனது உரிய இடத்தைத் தக்க வைத்துக் கொண்டது. ஆமாம்! ஏழாவது இடம். வெற்றிப் பட்டியலைப் பாருங்களேன்.

| | நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1. | ஜப்பான் | 75 | 50 | 51 | 176 |
| 2. | இரான் | 36 | 28 | 17 | 81 |
| 3. | சீனு | 33 | 45 | 28 | 106 |
| 4. | தென்கொரியா | 16 | 26 | 15 | 57 |
| 5. | வடகொரியா | 15 | 14 | 17 | 46 |
| 6. | இஸ்ரேல் | 7 | 4 | 8 | 19 |
| 7. | இந்தியா | 4 | 12 | 12 | 28 |

விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் நாட்டிற்கு, சூழ்நிலைகளும் சில முயற்சிகளும் சாதகமாக அமைவதும், அதனுல் தலைமை நாடாக ஆகி விடுவதும் உண்டு. அது போலவே, இரானின் முயற்சி ஜப்பானை வெல்லமுடியா விட்டாலும், இரண்டாவது இடத்தையாவது பெற முடிந்தது.

முதல் முறை தான் சீனுவின் அனுபவம் என்றாலும், அதன் சாதனை அளவிடற்கரியதுதான். இல்லையென்றால் நடந்து முடிந்த 9 வது விளையாட்டுப் போட்டிகளில், ஜப்பானை தோற்கடித்து, முதல் நிலையில் அமர்ந்திட முடிந்திருக்காதே! அடுத்து, எட்டாவது ஆசிய விளையாட்டுக்களைப் பற்றிப் பார்க்கலாம்.

# 9

# எட்டாவது ஆசிய விளையாட்டுக்கள்-1978

எட்டாவது ஆசிய விளையாட்டுக்களை நடத்திட நமது அண்டை நாடான பாகிஸ்தான் முன் வந்தது.

ஆனால் 1977ம் ஆண்டில் நடைபெற்ற இராணுவப் புரட்சியும், அதனால் ஏற்பட்ட ஆட்சி மாற்றமும், அரசியல் போக்கும் அங்கே அமைதியான சூழ்நிலையைத் தோற்றுவிக்க முடியாததன் காரணமாக, பாகிஸ்தானும் போட்டிகளை ஏற்று நடத்தவும் முன் வர வில்லை.

எப்படியாவது போட்டிகளை நடத்தியே ஆக வேண்டும் என்று முயற்சித்த ஆசிய விளையாட்டுக் கழகம், முதலில் ஜப்பானை அணுகி நடத்ித்தருமாறு கேட்டுக் கொண்டது. ஜப்பான் தன் இயலாமையைக் கூறி ஒதுங்கிக் கொண்டது. அடுத்து, தென் கொரியாவிடம் கேட்கப்பட்டது. அந்த நாடும் இந்தக் கோரிக்கையை நிராகரித்து விடவே, மூன்றாவது முயற்சியாக மலேசியாவை முற்றுகையிட்டுப் பார்த்தது.

அவ்வளவு குறுகிய கால அவகாசத்தில், அந்த அழைப்பினை அந்த நாடும் ஏற்றுக் கொள்ள இயலாத நிலை என்று நிராகரித்து விட்டது. இந்தியாவில் நடத்த முடியுமா என்ற யோசனையும் அங்கு இடம் பெற்றது.

ஆனால் 1982ம் ஆண்டில் 9வது ஆசிய விளையாட்டுக்களின் போட்டிகளை நடத்த வேண்டிய பொறுப்பு இந்தியாவின் மேல் ஏற்றப்பட்டிருந்ததால். இந்தியாவின் அதிவேக செயலிலும் இங்கு நடத்த முடியாத சூழ்நிலை இருந்ததன் காரணமாக, தாய்லாந்து நோக்கி முயற்சி முன்னேறியது.

ஏற்கனவே இரண்டு முறை ஆசியப்போட்டிகளை நடத்தியிருந்த தாய்லாந்து, 'எங்களால் நடத்த முடியும் என்ற ஆசை இருந்தாலும், பொருளாதார சிக்கல்' என்று பொருள் பொதிந்த பேச்சுக்களைக் கேட்டவர்கள், அந்த நாட்டின் விளையாட்டு உணர்வை வாயார வாழ்த்தி, அந் நாட்டிற்கு உதவி. உதவி பெற முன் வந்தனர்.

பதினொரு நாடுகள் பணவசதி அளிக்க முன் வந்தன. அப்படித் தந்த இந்தியாவின் தொகையானது 10,000 ஷில்லிங் என்றும் வரலாறு கூறுகிறது.

இப்படியாக, 12 ஆண்டு காலக்கட்டத்திற்குள்ளாக, பாங்காக் நகரில் மூன்று முறை ஆசிய விளையாட்டுக்களை நடத்துகின்ற பேறும் பெருமையையும் தாய்லாந்து பெற்றது.

26 நாடுகள் பங்கு பெற்றன. ஏறத்தாழ 5000 வீரர்களும் வீராங்கனைகளும் போட்டியிட்டனர். 19 போட்டி நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

இந்தியாவின் சிறந்த ஓட்டக்காரரான ஹரிசந்த் 5000, 10.000 மீட்டர் ஓட்டங்களில் வென்று புதிய சாதனைகளை ஏற்படுத்தினர்.

தமிழ் நாட்டைச் சேர்ந்த ஞான சேகரன் 200 மீட்டர் விரைவோட்டத்தில் தங்கப்பதக்கம் பெற்ருர்.

இந்திய வீராங்கனை கீதா ஜுட்ஷி, 800 மீட்டர் ஓட்டத்தில் தங்கமும். 1500 மீட்டர் ஓட்டத்தில் வெள்ளியும் பெற்று. இந்தியப் பெண்களின் எழுச்சிக்கு சாட்சியாக விளங்கினர்.

தனித்திறன் போட்டிகளில் தங்கங்கள் பெற்றாலும், நமது தேசிய விளையாட்டான வளைகோல் பந்தாட்டத்தில் இந்தியா மீண்டும் பாகிஸ்தானிடம் தோற்று தங்கத்தை இழந்தது. வெள்ளியாக மினுமினுத்துக் கொண்டது.

167 வீரர்களையும் வீராங்கனைகளையும் அனுப்பிய இந்தியாவுக்கு 28 வெற்றிப்பதக்கங்களே கிடைத்தன, அதாவது இந்தியா 6வது இடத்திற்கு முன்னேறிக் கொண்டது.

இரண்டாவது தடவையாக ஆசிய விளையாட்டுக்களில் இடம் பெற்ற சீனாவோ, முதலிடத்தைப் பிடிப்பதற்காக மும்முரமான முயற்சியில் ஈடுபட்டு, ஜப்பானையே சில சமயங்களில் அச்சப்படுத்தவும் தொடங்கியது. என்றாலும் குறைந்த பதக்கங்கள் வித்தியாசத்தில் சீனா இரண்டாவது இடத்தையே பிடித்து பெருமை பெற்றது.

மூன்றாவது முறையாக போட்டிகளை நடத்திய தாய்லாந்து, எட்டாவது இடத்திலிருந்து 5வது இடத்தைப் பிடித்து ஆறுதல் கொண்டது.

வெற்றிப் பதக்க விளக்கப் பட்டியல்

| | நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1. | ஜப்பான் | 70 | 59 | 49 | 178 |
| 2. | சீனா | 51 | 54 | 46 | 151 |
| 3. | தென்கொரியா | 18 | 20 | 31 | 69 |
| 4. | வடகொரியா | 15 | 13 | 15 | 43 |
| 5. | தாய்லாந்து | 11 | 12 | 19 | 42 |
| 6. | இந்தியா | 11 | 11 | 6 | 28 |

தொடர்ந்து, 1982ம் ஆண்டு இந்தியாவில் 9வது ஆசிய விளையாட்டுக்கள் நடைபெற்றன. இனி, இந்தியாவில் நடைபெற்ற வெற்றிகரமான விழா நிகழ்ச்சிகளையும், வெற்றி சாதனைகளையும், சுவையான சம்பவங்களையும் தொடர்ந்து காண்போம்.

# 10

# ஒன்பதாவது ஆசிய விளையாட்டுக்கள்-1982

## நாடுகளும் பங்குபெற்ற ஆட்டக்காரர்களும்

போட்டியிடுகின்றவர்கள் பெறும் மொத்த வெற்றிப் பதக்கங்கள் 1732

| | |
|---|---|
| தங்கப்பதக்கம் | —564 |
| வெள்ளிப்பதக்கம் | —564 |
| வெண்கலப்பதக்கம் | —604 |

33 நாடுகளிலிருந்து 5000க்கு மேற்பட்ட வீரர்கள் 21 விளையாட்டுக்களில் போட்டியில் கலந்து கொண்டனர்.

ஒவ்வொரு வெற்றிப் பதக்கமும் 60 மில்லி மீட்டர் குறுக்களவு கொண்டதாக இருக்கும்.

நினைவு பதக்கங்கள் 20,000 ஆகும்.

போட்டியை நடத்தும் தொழில் நுட்ப வல்லுநர்கள், ஆட்ட அதிகாரிகள். விசேஷ கமிட்டியுடன் தொடர்பு கொண்டவர்கள் அனைவருக்கும் பதக்கம் வழங்கப்பட்டது.

இதன் குறுக்களவு 60 மில்லி மீட்டர் உடையது. இது ஒரு வெண்கலப் பதக்கம் ஆகும்.

**போட்டியிட்ட நாடுகள் :**

1 இந்தியா
2 ஜப்பான்
3. லெபனான்
4 தாய்லாந்து
5. தென் கொரியா
6. சீனா
7. குவட்டார்
8 வட கொரியா
9 பாகிஸ்தான்
10. ஈராக்
11. சவூதி அரேபியா
12. பிலிப்பைன்ஸ்
13. ஈரான்
14. வடக்கு யேமன்
15. தெற்கு யேமன்
16. பஹரைன்
17. குவைத்
18. மலேசியா
19. இந்தோனேஷியா
20. ஹாங்காங்
21. சிங்கப்பூர்
22. ஐக்கிய அரபு நாடுகள்
23. ஆப்கானிஸ்தான்
24. லெபனான்
25. வங்க தேசம்
26. சிரியா
27. பர்மா
28. நேபாளம்
29. ஓமன்
30. வியட்நாம்
31. மங்கோலியா
32. ஸ்ரீலங்கா
33. மாலத்தீவு

அதிகமான வீரர்கள் வீராங்கனைகளைக் கொண்ட நாடு இந்தியா 644. குறைந்த எண்ணிக்கையுள்ள வீரர்களை உடைய நாடு குவைத் .

அகில உலக ஒலிம்பிக் கழகத்தின் தலைவர் ஜுவன் அந்தோனியோ. சமாரஞ்ச் வந்து கலந்து கொண்டார். சிறப்பான நிகழ்ச்சியாகும்.

இதுவரை 8 முறை நடந்த ஆசிய விளையாட்டுப் போட்டிகளில், ஒரு முறை கூட ஒலிம்பிக் கொடி ஏற்றப்படவில்லை. இந்தியாவில் நடத்தப்படும் 9வது போட்டியில் தான், முதல்

முதலாக ஏற்றிப் பறக்க விடப்பட்டது. பெருமை தரக்கூடிய நிகழ்ச்சியாகும்.

நடைபெற்ற நாட்கள் நவம்பர் 19 முதல் டிசம்பர் 4 வரை.

மொத்தம் 21 விளையாட்டுக்களில் போட்டிகள் நடைபெற்றன.

1. வில் அம்பு போட்டி
2. தனித்திறன் போட்டி
3. இறகுப் பந்தாட்டம்
4. கூடைப்பந்தாட்டம்
5. குத்துச் சண்டை
6. சைக்கிள்
7. குதிரையேற்றப் போட்டி
8. கால் பந்தாட்டம்
9. சீருடற் பயிற்சி போட்டிகள்
10. கோல்ஃப்
11. கைஎறிப் பந்தாட்டம்
12. வளைகோல் பந்தாட்டம்
13. துப்பாக்கிச் சுடும் போட்டி
14. நீச்சல் போட்டி
15. மேசைப் பந்தாட்டம்
16. டென்னிஸ்
17. கைப்பந்தாட்டம்
18. எடைத் தூக்கும் போட்டி
19. மல்யுத்தப் போட்டி
20. துடுப்புப் படகுப் போட்டி
21. சிறுபடகுப் போட்டி

9-வது ஆசிய விளையாட்டுப் போட்டியில் புதிதாக இடம் பெற்ற, அதாவது புதிதாகப் போட்டி நடத்தப்பட்ட நிகழ்ச்சிகள் நான்காகும்.

1. கோல்ஃப்
2. கையெறிப்பந்தாட்டம் (Hand Ball)
3. படகுப் போட்டி
4. குதிரையேற்றப் போட்டி

காட்சிப் போட்டியாக நடத்திக்காட்டப்பட்ட விளையாட்டுக்கள் இரண்டு. அவை.

1. கபாடி (இந்திய விளையாட்டு)
2. செபாக் தக்ரா (மலேஷியா விளையாட்டு)

விளையாட்டுக்களில் கலந்து கொள்ளவிருக்கும் நாடுகளின் எண்ணிக்கை.

33 க்கு மேல் என்று எதிர்பார்க்கப்பட்டு, கலந்து கொள்ளும் வீரர்களின் எண்ணிக்கை 5000 க்கும் மேல் ஆகி, அவர்களுக்கு இடையே சிறப்பாக நடந்த விளையாட்டுப் போட்டிகளை நடத்த உதவிய நுண்திறன் வாய்ந்த அதிகாரிகள் 2700 பேர்கள்.

இந்த 21 போட்டி நிகழ்ச்சிகளும் 17 விளையாட்டரங்கங்களில் நடத்தப்பட்டன.

நடைபெற்ற விளையாட்டரங்கங்கள்.

1. அம்பேத்கார் ஸ்டேடியம் —கால்பந்தாட்டம்
2. ஆசிய விளையாட்டு கிராம மையம் —எடைத்தூக்கல்
3. டெல்லி கோல்ப் கிளப் — கோல்ப்
4. டெல்லி பல்கலைக்கழக மைதானம் —
    1. வில்வித்தை
    2. கையெறிப் பந்து
5. பெரோஷா கோட்லா மைதானம் —மல்யுத்தம்
6. ஹால் ஆப் ஸ்போர்ட்ஸ் — குத்துச்சண்டை
   பிரகதி மைதானம் — மேசைப் பந்தாட்டம்
7. ஹர்பக்ஷ் ஸ்டேடியம் — குதிரையேற்றம்
8. இந்தர் பிரஸ்த ஸ்டேடியம் —
    1. இறகுப் பந்தாட்டம்
    2. சீருடற் பயிற்சிகள்
    3. கைப்பந்தாட்டம்
9. ஜவகர்லால் நேரு ஸ்டேடியம் —
   போட்டி ஆரம்பமும் முடிவும்,
   தனித்திறன் போட்டிகள்
   கால்பந்தாட்டம்

10. மாடல் டவுன் ஸ்டேடியம் — கால்பந்தாட்டம்

11. நேஷனல் ஸ்டேடியம் — வளைகோல் பந்தாட்டம் (ஆண்கள்)

12. ரயில்வே ஸ்டேடியம் — காட்சிப் போட்டிகள்
   1. கபாடி
   2. செபாக் டக்ரா.

13. சிவாஜி ஸ்டேடியம் — வளைகோல் பந்தாட்டம் (பெண்கள்)

14. தல்கடோரா இன்டோர் ஸ்டேடியம் — கூடைப் பந்தாட்டம்

15. தல்கடோரா நீச்சல்குளம் — நீச்சல்

16. துக்ளகாபாத் ஷுட்டிங் ரேஞ் — துப்பாக்கி சுடல்

17. டென்னிஸ் ஸ்டேடியம் — டென்னிஸ்

18. யமுனா வெலோடிரோம் — சைக்கிள்
பம்பாயில் அரபிக்கடலில் —படகுப் துடுப்புப் போட்டி
ஜெயப்பூர் ராம்கார் ஏரியில் —படகு விடும் போட்டி

ஆசிய விளையாட்டுகளுக்கென்றே புதியதாக நிர்மாணிக்கப்பட்டிருந்த விளையாட்டரங்கங்கள்.

1. ஜவகர்லால் நேரு ஸ்டேடியம்
2. தல்கடோரா நீச்சல் குளம்
3. இந்தர் பிரஸ்த ஸ்டேடியம்
4. யமுனா சைக்கிள் வெலேடிரோம்
5. ஷூட்டிங் ரேஞ்ச்.

ஆசியப் போட்டிகளில் கலந்து கொள்ளும் வீரர்களுக்கு என கட்டப்பட்டிருந்த வீடுகள் 853. இப்படி ஒரு புதிய கிராமத்தையே உருவாக்கி இருந்தார்கள்.

டிக்கெட் விற்கப்பட்ட முறை.

மொத்த டிக்கெட் விற்பனையில் 50 சதவீதம் டெல்லியில் 20 சதவீதம் அருகில் உள்ள மாநிலங்களான ஹரியானா உத்திரப்பிரதேசம், ராஜஸ்தான், சண்டிகார்.

மீதி 30 சதவீதம் பிற மாநிலங்களில் விற்பதற்கா ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, மூலமாக இந்தியா முழுவதும் டிக்கெட்டுகள் விற்க ஏற்பாடுகள் நடந்தன போட்டிகள் நடைபெறும் நாளான 19 நவம்பர் மாதத்தின் 6 வார காலத்திற்கு முன்னதாகவே, டிக்கெட்கள் விற்பனை நிறுத்தப் பட்டன.

மாணவர்களுக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் சலுகைவிலையில் டிக்கெட்கள் விற்கப்பட்டன.

ஆரம்பத்தில் ஆசிய விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்காக இதுவரை இந்தியா 60 கோடி ரூபாய்களை செலவழித்தது. இதில் 40 கோடி ரூபாய் அளவில் பந்தய மைதானங்கள் கட்டிட வசதிகள் போன்ற நிரந்தர வசதிகளுக்காக செலவிடப்பட்டிருக்கின்றன. 200 கோடி ரூபாய் தான் போட்டிகள் நடத்தப்படுவதற்காக செலவிடப் பட்டிருக்கின்றன. என்று அறிவித்திருக்கின்றனர்.

9வது ஆசிய விளையாட்டுப் போட்டியின் சிறப்பு அமைப்புக் குழுவின் தலைவர்-மத்திய இணை அமைச்சர் திரு. பூடாசிங் ஆவார். அவரது அரிய திறமையால் விளையாட்டுப் போட்டிகள் வெற்றிகரமாக நடைபெற்றன.

1951ம் ஆம் ஆண்டு இந்தியாவில் முதல் தடவையாக நடந்த ஆசிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்ற நேஷனல் ஸ்டேடியத்தில், இந்த முறை நடைபெறவிருந்த

ஆசிய வளைகோல் பந்தாட்டப் போட்டிகள் நடை பெற்றன. அதற்காக புதிய ஆடுகளத்தரை (ஆஸ்ட்ரோடர்ப்) என்ற செயற்கைத்தரை அமைக்கப்பட்டிருந்தது. அதில் அதற்கான செலவு 75 லட்சம் ஆகும்.

ஜவகர்லால் நேரு ஸ்டேடியம்

90 ஏக்கர் பரப்பளவில் கட்டப்பட்டுள்ள பெரிய விளையாட்டரங்கமாகும். அதில் 75,000 பேர்கள் ஒரே சமயத்தில் உட்கார்ந்து பார்க்கும் வண்ணம் வசதியான இருக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. அதைக் கட்டி முடிக்கக் கூடிய செலவானது 20, 80 கோடி என்று திட்ட மிட்டு ஒதுக்கப்பட்டிருந்தது.

இந்திர பிரஸ்த ஸ்டேடியம்

25,000 பேர்கள் உட்கார்ந்து பார்க்கும் வண்ணம் அமையப் பெறும் இந்த உள்ளாடும் விளையாட்டரங்கம், உலகத்தில் மூன்றாவது பெரிய அரங்கமாகும்.

அமெரிக்காவில் உள்ள டெக்சாஸ் மாகாணத்தில் அமைந்த ஹவுஸ்டன் ஏரோடிராம் (Houston Aerodrome); நியூ ஆர்லின்ஸ் எனும் இடத்தில் அமைந்த சூப்பர்டோம் எனும் இடம், மூன்றாவதாக இந்தியாவில் இப்பொழுது அமைந்திருக்கும். இந்திரபிரஸ்த அரங்கம் உலகத்தின் மூன்றாவது இடம். அமெரிக்காவைத்தவிர மற்ற ஆசிய ஐரோப்பிய கண்டங்களில் இதுவே பெரிய அரங்கமாகும்.

இதை நிர்மாணிக்க ஆகும் செலவு 25.83 கோடி என்று குறிக்கப்பட்டிருந்தார்கள்.

தல்கடோரா நீச்சல் குளம்

6000 பேர்கள் அமர்ந்திருந்து பார்க்க வசதியாக அமையப் பெறும் இந்த நீச்சல் குளம், சகல வசதிகளையும் கொண்டதாக அமைக்கப்பட்டது.

தட்பவெப்ப நிலைக்கு ஏற்ப தண்ணீரை பதப்படுத்தி பயன் படுத்தும் வகையில் நிர்மாணிக்கப்படிருக்கிறது.

ஏர்கண்டிஷன் வசதிக்காக, ஒரு மணி நேரம் பயன்படுத்தினால், அதற்கான செலவு 10,000 ரூபாய் என்பதாகவும் கணக்கிட்டிருக்கின்றார்கள்.

## விளையாட்டு வீரர்கள் தங்கும் கிராமம்

65 ஏக்கர் பரப்பளவில் கட்டப்பட்டுள்ள ஆசிய விளையாட்டுக் கிராமம், பலவித வசதிகளும், ரகங்களுமாக பத்துவித அமைப்பில், 705 வீடுகள் கட்டப்பட்டன. ஏறத்தாழ 5000 வீரர்கள், வீராங்கனைகள், அதிகாரிகள் தங்குவதற்கான வசதிக்காக, செலவழிக்கப்பட்டிருக்கின்ற தொகை 18.54 கோடியாகும்.

## இரண்டு புதிய விளையாட்டுக்கள்

இந்திய நாட்டுத் தேசிய விளையாட்டான கபாடியும் மலேஷிய நாட்டு விளையாட்டான செபாக்தக்ராவும் காட்சிப் போட்டி விளையாட்டாக நடத்தப்பட்டன.

ஒரு குழுவிற்கு 7 பேர்கள் கொண்ட கபாடி ஆட்டத்தில், எதிர்க்குழுவினரைப் பாடிப்போய் தொட்டாலும், பாடி வருபவரைப் பிடித்தாலும் ஒரு எண் வெற்றி பெற, ஆட்ட இறுதியில் அதிக வெற்றி எண்கள் எடுக்கின்ற குழுவே வெற்றி பெற்றதென்று அறிவிக்கப்படும்.

இனி, மலேஷியா நாட்டின் ஆட்டமான செபாக்தக்ரா, எப்படி ஆடப்படுகிறது என்பதை காண்போம்.

மலேஷியாவில் தோன்றியஇந்த ஆட்டம், இப்பொழுது அதன் பிறப்பிடத்தை விட்டு, பல்வேறு ஆசிய நாடுகளுக்கும் பரவி பெருமை பெற்ற நிலையில் பிரபலமாகிக் கொண்டிருக்கிறது.

செபாக்தக்ரா (Sepak Takraw என்று அழைக்கப்படுகின்ற இந்த ஆட்டம் ஆரம்ப காலத்தில் செபாக்ராகா (Sepak Raga) என்றே பெயர் விளங்கியது.



அதன் பின்னர், இதற்கு செபாக் ராகா ஜேரிங் (Jaring) என்ற புதுப் பெயர் கொண்டது.

ஆனால் 1965ம் ஆண்டு, பொதுவான ஒரு கருத்தின் அடிப்படையில், எல்லோரும் ஏற்றுக் கொள்ளும் வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் தொடர்பாகவே செபாக் தக்ரா என்ற பெயர் நிலைத்திட வழி ஏற்பட்டது.

செபாக் எனும் மலேஷியச் சொல்லுக்கு உதை (Kick) என்பது பொருளாகும். Raga என்றால் கூடை என்றும், Jaring (ஜேரிங்) என்றால் வலை என்றும் பொருள் கூறுகின்றார்கள். Takraw என்றால் பந்து என்பது அர்த்தமாகும்.

ஆக, இந்த ஆட்டமானது, பந்தை உதை என்பதாக கூறப்பட்டு, ஆடப்பட்டு வருகிறது.

உதை என்பதால் இது கால் பந்தாட்டமும் அல்ல. வலைக்கு மேலே பந்தை (உதைத்து) ஆடுவதால் இது கைப் பந்தாட்டமும் அல்ல. கால் பந்தாட்டமும் கைப்பந்தாட்டமும் சேர்ந்திணைந்த ஒரு கலவை ஆட்டமாகும்.

**பந்தின் கனமும் அளவும்**

இந்த ஆட்டத்திற்குரிய பந்து பிரம்பினால் மடித்து பின்னப்பட்ட அமைப்பாகும். உட்புறம் வெறுமையாக அமையப்பட்ட, எடையற்ற இந்தப் பந்தின் விட்டம் 4,5 அங்குலமாகும். இதன் எடை 4 முதல் 5 அவுன்சுக்கு உள்ளாக இருக்க வேண்டும்.

**ஆடுகளமும் வலையும்**

ஆடுகளத்தின் நீளம் 44 அடி, 22 அடி அகலம், வலையின் உயரம் 5 அடி 5 அங்குலம்.

**ஆடும் முறை**

ஒரு குழுவிற்கு 3 ஆட்டக்காரர்கள் உண்டு. பந்தை எதிர்க் குழுவிற்கு அனுப்பப்படுகிறது. அங்கிருந்து எதிராளிகள் அந்தப் பந்தை காலால் உதைத்தோ அல்லது தலையால் மோதியோ எதிர்க் குழுவிற்கு அனுப்ப வேண்டும்.

நெஞ்சின் மேல் பந்து படலாம்.

ஆனல், பந்தை கையால் தொடக்கூடாது.

ஒரு குழு பந்தை மூன்று முறை (Three Touches) ஆடி அனுப்பலாம்.

வலையை எக்காரணத்தை முன்னிட்டும் தொடக்கூடாது. ஒரு குழு வெற்றி பெற 15 வெற்றி எண்கள் எடுக்க வேண்டும்.

இந்த ஆட்டம் 1964ம் ஆண்டு முதல் ஆசிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்ற போது, போட்டிகள் நடந்தேறின மலேஷியாவே வென்ற நாடாகும்.

# 11

# ஆரம்ப விழாவின் அருமை

இரண்டாவது முறையாக இந்தியத் தலைநகராம் டில்லி மாநகரில் நடைபெறும் ஒன்பதாவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் ஆரம்ப விழா 1982ம் ஆண்டு நவம்பர் மாதம் 19ந் தேதியன்று மிகவும் சிறப்பாக நடைபெற்றன.

ஆசிய கண்டத்திலிருந்து 33 நாடுகள் டில்லி நகரில் வந்து தங்கியிருந்து, அலங்கார அணிவகுப்பில் கலந்து கொண்டன.

வரலாறு சிறப்பு படைத்த ஜவகர்லால் நேரு ஸ்டேடியத்தில்தான் இந்த அணிவகுப்பு வைபவமும், அலங்காரக் காட்சிகளும், ஆறறிவினையும் மயக்குகின்ற ஆட்டங்களும், கலை நிகழ்ச்சிகளும் பல நாட்டுப் பிரமுகர்களும் பாராட்டி மகிழும் வண்ணம், பெருமையை சேர்க்கும் வண்ணம் நடந்தேறின.

31 ஆண்டுகளுக்கு முன்னே முதல் ஆசிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்ற தேசிய ஸ்டேடியமானது. புதுப் பொலிவு பெற்று விளங்கியது. அந்த அருமை மிகு ஸ்டேடியத்தில், சோலார் மூலம் பெற்ற தீயின் மூலம் ஏற்றிய தீப் பந்தத்தை 40 வீரர்களும், வீராங்கனைகளும் மாறி மாறிப் பெற்று 2 கிலோ மீட்டர் தூரம் ஓடிவந்து, கொண்டு தந்த தீப்பந்தத்தை பிரபல ஒலிம்பிக்வீரர் பல்வீர் சிங் ஏந்தி வந்து ஆசிய ஜோதியை ஏற்றிவைத்தார்.

இந்த இனிய விழாவினை, திருமதி இந்திராகாந்தி அவர்கள் ஏற்றமுறத் தொடங்கி வைத்த பின்னர், மாலையில் நடை



இந்தியாவெங்கும் விளையாட்டு ஒளி பரவ வேண்டு என்று நமது பிரதமர் ஆசிய தீபம் ஏற்றுகிறார். அருகே இருப்பவர் இந்திய விளையாட்டுத்துறை அமைச்ச திரு. பூட்டாசிங்.

நேற்று அணிவகுப்பும் ஆரம்பவிழா நிகழ்ச்சிகளும் ஜவகர்லால் நேரு ஸ்டேடியத்தில் கோலாகலமாக நடைபெற்றன :

சரியாக 3 மணி அளவில், பாரத நாட்டுக் குடியரசுத் தலைவர் ஜைல்சிங், தமது மெய் காப்பாளர் படை சூழ, பாண்டு வாத்ய முழங்க ஸ்டேடியத்திற்குள் வருகை தந்தார்.

அவரை, ஆசிய விளையாட்டு விழாவின் விஷேஷக் குழுத்தலைவரும், இந்திய நாட்டு விளையாட்டு அமைச்சருமான திரு பூட்டாசிங் அவர்களும், ஆசிய விளையாட்டுக் கூட்டமைப்பின் தலைவர் திரு பல்வீந்தர்சிங் அவர்களும் வரவேற்றார்கள்.

அதன் பிறகு, 33 நாடுகளைச் சேர்ந்த 5000 வீரர்கள், வீராங்கனைகளின் அணிவகுப்பு மரியாதையை ராஷ்டிரபதி ஜைல்சிங் ஏற்றுக் கொண்டார்.

எட்டாவது ஆசிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்ற பாங்காக் நகர மேயர், ஆசிய விளையாட்டுக் கொடியை பல்வீந்தர்சிங்கிடம் ஒப்படைத்த கொடியும், ஒன்பதாவது ஆசிய விளையாட்டு விழாக் கொடியும் இசை முழக்கத்துடன் கொடிக் கம்பங்களில் ஏற்றி பறக்க விடப்பட்டன.

ராஷ்டிரபதி ஜைல்சிங் அவர்களை, விளையாட்டு விழாவைத் தொடங்கி வைக்குமாறு பல்வீந்தர் சிங் கேட்டுக் கொண்டார்.

'ஒன்பதாவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளைத் துவக்கி வைப்பதில் பெரு மகிழ்ச்சி கொள்கிறேன் என்று ராஷ்டிரபதி கூறியதும், '3 முறை பீரங்கிகள் முழங்கின. 2000 புறாக்கள் சமாதானச் சின்னமாக வானில் பறக்க விடப்பட்டன. வண்ண வண்ண பலூன்கள் 5000க்கு மேல் வானத்தில் பறந்து, வர்ணஜாலங்களையும், வண்ணக் கோலங்களையும் காட்டின.

அணிவகுத்து நின்ற வீரர்கள், வீராங்கனைகள், மற்று 75000க்கும் மேற்பட்ட பார்வையாளர்கள், பல்வே நாட்டுப் பிரதிநிதிகள், பிரமுகர்கள் மேல், மலர் மா பொழிந்தது பறந்து வந்த இரண்டு ஹெலிகாப்டர்கள்.

இந்திய நாட்டின் இசை வல்லுநர் இரவிசங்கர் அவர்க இயற்றித் தந்த ஆசிய விளையாட்டு இசையை, 200 பேர்க சேர்ந்து குழு இசையாகப் பாடினார்கள்.

அந்தப் பாட்டின் முதலிரண்டு அடிகள்

'அதிசுவாகதம்

சுபசுவாகதம்

அனந்த மங்களம்' என்பவையாகும்.

'வருக வருக, உங்கள் வரவு நல்வரவாகுக, உங்களு கெல்லாம் மகிழ்ச்சியும் நலமும் நிறைக' என்பதுதான் அவ்வ களின் அர்த்தமாகும்.

கலைஞர் நர்மேந்திர சர்மா அவர்கள் இயற்றிய பாடலுக்கு சித்தார் இசை மேதை பண்டித ரவிசங்கர் இசை அமைக் டெல்லி இராணுவ பப்ளிக் ஸ்கூல் மாணவ மாணவிகள் 20 பேர் சேர்ந்து பாடிய அப்பாடல் 4 நிமிடம் நேரம் ஒலித்தது.

அதற்கான ஆங்கில மொழி பெயர்ப்பை, பிரபல இந்தி நடிகர் அமிதாப் பச்சன் உணர்ச்சிகரமாகப் படிக்கும் டேப்பு ஒலிபரப்பப்பட்டது.

பாடலுக்குப் பிறகு, அனைத்து விளையாட்டு வீரர்க வீராங்கனைகள் சார்பாக, இந்திய வீராங்கனை கீதா ஜீட் விளையாட்டு உறுதி மொழியை வாசித்தார்.

இந்த ஆரம்ப விழாவின் அருமையான வைபவத்தில், 33 [illegible]கள் மூன்று மூன்ருக வரிசையாக நடந்து வந்த காட்சி [illegible]சிலிர்க்க வைத்தது.

இதில், விளையாட்டு விசேஷச் சின்னமாக ஏற்படுத்தப்பட்ட 'அப்பு' எனும் நடனமாடும் குட்டி யானைச் சின்னம், [illegible]களால் அலங்கரிக்கப்பட்டு பொம்மை உருவகம் பெற்று [illegible]து, பார்வையாளர்களைப் பரவசப்படுத்தியது.

இதற்கு முன் இப்படிப்பட்ட விழா எதுவுமே அமையவில்லை என்று எல்லாராலும் பாராட்டப்பெற்ற ஆசியப் போட்டிகளின் ஆரம்ப அணிவகுப்பு விழா, இந்திய நாட்டுத் தேசிய கீதம் பாடிய பின்னர் இனிதே நிறைவு பெற்றது.

இத்தகைய இனிய விழா நடைபெற்ற இடமான ஜவகர்லால் நேரு ஸ்டேடியத்தைப் பற்றியும் நாம் அறிந்து கொள்வது மிகமிக முக்கியமாகும்.

# 12

# ஜவகர்லால் நேரு ஸ்டேடியம்

---

1982ம் ஆண்டு சிறப்புற நடைபெற்ற ஆசிய விளை யாட்டுப் போட்டிகளுக்கான ஆயத்தங்கள். அத்யாவசி ஆக்கப் பணிகள் அனைத்தும் இரண்டு ஆண்டுகளுக் முன்னரே தொடங்கப்பட்டு விட்டன.

பம்பாயிலும் ஜெய்ப்பூரிலும் நடத்தப் படுகின்ற படகு போட்டிகளைத் தவிர, மற்ற எல்லா வகைப் போட்டிகளும் டெல்லி மாநகரிலே நடத்தப்படுவதற்காக வேலைகள் துரி கதியில் நடைபெற்றன.

மொத்தம் 15 விளையாட்டரங்கங்கள் என்று தீர்மானிக்க பட்டது. அதில் முன்னரே இருந்த விளையாட்டு அரங்க களில் 7 ஸ்டேடியங்கள் பல லட்சக்கணக்கான செலவிலே பழுது பார்க்கப்பட்டு, செப்பனிடப்பட்டு, திருத்தியமைக்க பட்டன.

புத்தம் புதிதாக 8 ஸ்டேடியங்களும் போட்டிக்காக கட்டப்பட்டன. அந்த எட்டு அரங்கங்களிலும் மிக நேர்த் யான ஒன்றாக அமைந்து விளங்குவதுதான் ஜவகர்லால் நே ஸ்டேடியமாகும்.

90 ஏக்கர் பரப்பளவில் அமைந்திருக்கும் இந்த அரங்கத்தை, இரண்டே ஆண்டுகளில் நமது இந்திய எஞ்சினியர்கள் எழிலாகவும் எடுப்பாகவும் கட்டி முடித்திருக்கின்றார்கள். உலக பொறியியல் வல்லுநர்களும் உண்மையிலேயே வியந்து பாராட்டும் வண்ணம், வெற்றிகரமானதாக உருவாக்கியிருக்கின்றார்கள்.

இந்த பரந்த அரங்கத்தைக் கட்டி முடிப்பதற்காக, 150 லட்சம் செங்கற்கள், 21 ஆயிரம் டன்கள் சிமிண்ட், 8700 டன்கள் உருக்குக் கம்பிகள், 1000 டன்கள் இரும்பு 4050 கிலோ வாட் மின்சாரம் பயன்படுத்தப்பட்டன என்று ஒரு பெரிய பட்டியலைப் பார்க்கும்போது, நாமும் வியந்துதான் போகிறோம்.

ஆமாம், இந்த மாபெரும் மாணிக்க அரங்கத்தைக் கட்டி முடிக்க, 17 கோடி ரூபாய் ஆகியிருக்கிறது என்கின்றனர். இருக்காதா என்ன?

முதல் ஆசியப் போட்டிகளை நடத்துவதற்கு முன் வந்தது மட்டுமல்ல; அதற்கான 'ஆசியப் போட்டிகள்' என்று பெயர் சூட்டியது மட்டுமல்ல; ஆக்க வேலைகள் அத்தனைக்கும் ஆதார அடித்தளமாக இருந்து, ஊக்கமும் கொடுத்து, வெற்றிகரமாக முடித்து வைக்கக் காரண கர்த்தாவாகவும், காரியவாதியாகவும் விளங்கிய இந்திய நாட்டின் முதல் பிரதமர், ஆசிய ஜோதி, ஜவகர்லால் நேருவின் பெயரையே இந்த அரங்கத்திற்குச் சூட்டி அரங்கத்தின் பெருமையை மேலும் உயர்த்தி விட்டார்கள். ஆசிய விளையாட்டுக் கழகத்தின் அமைப்பாளர்கள் பெருமை பெற்றனர்.

இதில் அமையப் பெற்ற சில சிறப்பான அம்சங்களும் நம்மை பிரமிப்பில் தான் ஆழ்த்தி விடுகின்றன.

75,000 பார்வையாளர்கள் அமர்ந்திருந்து பார்க்கும் வண்ணம் அமையப் பெற்ற இரண்டு அடுக்குகள் ஆகும்.

அவசர நேரத்தில், அரங்கத்தை விட்டு அத்தனை பேரும் 10 நிமிடங்களுக்குள்ளே வெளியேறிப் போய் விடும் அளவுக்கு வாசல் வசதிகள். தனித்தனியாக உள்ளே வந்து சேர தனித்தனி வாயில்கள், சுலபமாக வந்து செல்லும் வண்ணம் அமையப் பெற்ற அகலமான வாயில் அமைப்புக்கள்.

நவீன சாதனமான கம்ப்யூட்டரின் மின் சாதனப் பொறியுள்ள வெற்றி எண் காட்டும் பெரும் பலகை. அதில் ஆங்கிலம். இந்தி ஆகிய மொழிகளில் உடனுக்குடன் படங்களையும், வெளியாகும் முடிவுகளையும் காட்டுகின்ற வண்ணம் அமைந்த அமைப்புக்கள். இம்முறையை ஹங்கேரிய நிறுவனம் ஒன்றுடன் இணைந்து, இத்தகைய ஏற்றம் மிக்க எலெக்ட்ரானிக் போர்டுகள் அமையப் பெற்ற அரங்கமாக இது திகழ்கிறது.

இத்துடன் மட்டுமல்லாமல், விளையாட்டு வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும் தேவையான வசதிகளை அளிக்கும் வகையில் திறப்பட இட வசதிகளையும் இதிலே அமைத்திருக்கின்றனர்.

உடைகள் மாற்றிக் கொள்ளத் தனியறைகள்; உடலை "மசாஜ்" பண்ணிக் கொள்ள வசதிகள்; தங்கள் உடைமைகளைப் பத்திரப்படுத்தி வைக்கத்தக்க பாதுகாப்புப் போட்டகங்கள்; லாக்கர்கள்; மருத்துவ அறை, உணவுக்கூடம், சிற்றுண்டிச் சாலை, செய்திகளை சேகரிக்கும் பத்திரிக்கையாளர்கள் அறை என்று பல்வேறு விதமான வசதிகளையும் வைத்துக் கொண்டிருக்கிறது இந்த அரங்கம்.

போட்டோ எடுத்தபிறகு, உடனுக்குடன் அவற்றைப் படமாக்கும் வசதிகளும், இதில் உண்டு.

எனவேதான், இந்த புகழ்மிக்க ஸ்டேடியத்தில் ஒன்பதாவது ஆசிய விளையாட்டுக்களின் அணிவகுப்பு ஆரம்பநாள்

விழாவையும், இறுதிநாள் நிறைவு விழாவையும் நடத்தினார்கள்.

மூன்றாள் முதல் பிரதம மந்திரியாகிய தந்தையோ—முதல் ஆசிய விளையாட்டுப் போட்டிகளை நடத்திட வாய்ப்பளிக்க, முப்பத்தியொரு ஆண்டுகளுக்குப்பிறகு, அவரது ஒரே மகள், இந்நாள் பிரதம மந்திரி, தனது தந்தையின் பெயரால் அமையப் பெற்ற ஜவகர்லால் நேரு ஸ்டேடியத்தை, நவம்பர் 19ந் தேதியன்று, 40,000 பேர் வந்திருந்து அமர்ந்திருந்த நாளில், பெருத்த ஆரவாரத்திற்கிடையே திறந்து வைத்தார்

ஜவகர்லால் நேருவின் 92 வது பிறந்த நாளை ஒட்டி, அவர் ஆற்றிய தொண்டையும் நினைவுபடுத்திவிட்டு, அவர் பெயரால் அமைந்த இந்த ஸ்டேடியத்தை, இந்த நாட்டுக்கே அர்ப்பணிப்பதாக அறிவித்தார். இது ஒரு வரலாற்றுப் பெருமை நிறைந்த நிகழ்ச்சியாகும்.

# 13

# புதிய சாதனைகளில் புரட்சி

விரைக, உயர்க, வலிமை பெறுக என்பது தான் ஒலிம்பிக் பந்தயத்தின் குறிக்கோள்.

இந்த குறிக்கோள் ஒவ்வொரு போட்டியின் போதும் நிதர்சனமான உண்மையாக நடந்தேறி, மக்களை மகிழ்விக்கிறது. முன்னேற்றப் பாதையில் முனைந்து நடைபெறச் செய்கிறது. மனித சக்திக்கு எல்லையில்லை என்ற மாபெரும் கருத்தினைத் தெளிவு படுத்தி, வலிமைப் படுத்துகிறது.

1978ம் ஆண்டு நடைபெற்ற 8வது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில், 12 நிகழ்ச்சிகளில் புதிய சாதனைகள் ஏற்படுத்தப்பட்டன. அவற்றில் ஆண்களுக்கானப் போட்டிகளில் 7 நிகழ்ச்சிகளிலும். பெண்களுக்கானப் போட்டிகளில் 5 நிகழ்ச்சிகளிலும் புதிய சாதனைகள் நிகழ்ந்தன.

1982ம் ஆண்டு நடைபெற்ற ஆசியப் போட்டிகளில் 27 நிகழ்ச்சிகளில், புதிய சாதனைகள் நிகழ்ந்திருக்கின்றன. வீரர்கள் போட்டியிலே 16 நிகழ்ச்சிகளிலும், வீராங்கனைகள் வரிசையிலே 11 நிகழ்ச்சிகளிலும் புதிய சாதனைகள் பெருக்கெடுத்து ஓடியிருக்கின்றன.

இந்திய வீரர் பர்துமன் சிங் இரண்டாவது ஆசிய விளையாட்டில் இருப்புக்குண்டு எறிவதில் புதிய சாதனை செய்கிறார்.



## ஆண்கள் பிரிவில் நிகழ்ந்த புதிய சாதனைகள்

| | நிகழ்ச்சி. | பெயர். | நாடு. | சாதனை. |
|---|---|---|---|---|
| 1. | இரும்புகுண்டு எறிதல் | பகதூர்சிங் | இந்தியா | 18.53மீ. |
| 2. | தட்டெறிதல் | வெய்நான்லி | சீனு | 58.50மீ. |
| 3. | சங்கிலிக் குண்டு வீசுதல் | சிகாஞேபு முரோபுசி | ஜப்பான் | 71.14மீ. |
| 4. | உயரத் தாண்டுதல் | சூஜியான் ஹீவா | சீனு | 2.33மீ |
| 5. | மும்முறை தாண்டுதல் | சுவோசென்சியன் | சீனு | 16.80மீ. |
| 6. | கோலூன்றித் தாண்டுதல் | தகாகாஷி தமோமி | ஜப்பான் | 5.30மீ. |
| 7. | 200 மீ. ஓட்டம் | ஜாகுவென்ஜஸ் | தென் கொரியா | 20.89வி |
| 8. | 110மீ. த. தா. ஓட்டம் | யாஷிபூமி பீஜு மோரி | ஜப்பான் | 14.09வி |
| 9. | 4X100 மீ. தொடரோட்டம் | சீனு | | 39.62வி |
| 10. | 4X400 மீ. தொடரோட்டம் | ஜப்பான் | | 3.06.75வி |
| 11. | 5000 மீ. ஓட்டம் | சின்டாகுமபகாரி | ஜப்பான் | 13.53.74 |
| 12. | 10.000 மீ. ஓட்டம் | குவோவிஷாங் | சீனு | 29.37.56வி |
| 13. | 1500. மீ. ஓட்டம் | பாலே ஜாரல்ஸ் | இராக் | 3.48.49வி |
| 14. | 20 கி. மீ. நடை | சத்திராம் | இந்தியா | 1.29.29.00 |

| | | | |
|---|---|---|---|
| 15. | 50 கி.மீ. நடை | வாங்சாடாங | சீனா | 4மணி 3நி 36வி |
| 16. | 800மீ. ஓட்டம் | சார்லஸ் பரோமியா | இந்தியா | 46.81 |
| | | பெண்கள் | | |
| 17. | 400 மீ. ஓட்டம் | கிரோமி இசோசாகி | ஜப்பான் | 54.43வி. |
| 18. | 400 மீ. த. தா. ஓட்டம் | M. D வலசம்மா | இந்தியா | 58.47வி |
| 19. | 800 மீ. ஓட்டம் | யங் ஆசேக்ஹங் | வடகொரியா | 2.05.69வி |
| 20. | 1500 மீ. ஓட்டம் | யங் ஆங் சங் | வடகொரியா | 4.13.40 |
| 21. | 4X100 மீ தொ | | ஜப்பான் | 45.13வி |
| 22. | 4X400 மீ தொ | | ஜப்பான் | 3.37.44 |
| 23. | உயரத் தாண்டுதல் | டங்கெள் லிங் | சீனா | 1.99மீ. |
| 24. | நீளத் தாண்டுதல் | வென் பென் லியாவோ | சீனா | 6.42மீ. |
| 25. | வேலெறிதல் | எமிமாட்சியூ | ஜப்பான் | 60.52மீ. |
| 26. | இரும்புக்குண்டுஎறிதல் | லிமெய்சூ | சீனா | 17.77மீ. |
| 27 | தட்டெறிதல் | லிலா வோசூ | சீனா | 57.24மீ. |
| 28. | புதிய நிகழ்ச்சியில் புதிய சாதனைகள் | | | |
| 7 | நிகழ்ச்சிப்போட்டிகள் | யிபெய்சு | சீனா | 65.94 வெற்றி எண்கள் |



இந்திய வீராங்கனை பக்டவா கம்பாடா
இரும்புக் குண்டு எறியும் காட்சி

இந்த ஆசியப் போட்டிகளில், புதிய நிகழ்ச்சியாக அறிமுகப் படுத்தப்பட்டது ஹெப்டாதலான் என்ற 7 போட்டி நிகழ்ச்சியாகும்.

1. 100 மீட்டர்: தடை தாண்டி ஓட்டம்
2. இரும்புக் குண்டு எறிதல்
3. உயரத் தாண்டுதல்
4. 200 மீட்டர் விரைவோட்டம்
5. நீளத் தாண்டுதல்
6. வேலெறிதல்
7. 800 மீட்டர் ஓட்டம்

இந்தப் புதிய நிகழ்ச்சியில் முதன் முதலாக வென்ற வீராங்கனையின் வெற்றிப் புள்ளிகளே, முதல் சாதனையாக பொறிக்கப்பட்டிருக்கிறது.

14

# இந்தியாவின் நிலை

முப்பத்தி மூன்று நாடுகளின் முர்மரமான போட்டிகளிலே முதல் நிலை பெற்ற நாடு என்ற பெரும் புகழைப் பெற்றது சீன நாடு.

1951ம் ஆண்டிலிருந்து வெற்றிகளைக் குவித்து, அதிகப் பதக்கங்களை அடைந்து, ஆன்ற புகழ் பெற்று வந்த ஜப்பான், 8 முறை பெற்ற வெற்றிகளைத் தொடர முடியாமல், இரண்டாம் இடத்தையே பெறும் நிலைக்கு ஆளானது.

மொத்தப் பதக்கங்களிலே சீனாவும் ஜப்பானும் ஒரே எண்ணிக்கை, அதாவது 153 பதக்கங்களைப் பெற்றிருந்தாலும், தங்கப் பதக்கங்கள் என்ற தகுதியை வைத்து நிர்ணயிக்கும் பொழுது 4தங்கங்கள் பின் தங்கிவிட்ட காரணத்தால், இரண்டாவது வெற்றி நாடு என்று புகழ் பெற்றுக் கொண்டது.

வழக்கம் போல, நமது தாயகம், வாய்ப்புக்கள் அதிகம் இருந்த போதிலும், வசதிகள் கூடி வந்திருந்த போதிலும், தாய் மண்ணிலே போட்டிகள் என்ற தகுதிகள் கூட நிறைந்திருந்த போதிலும், மீண்டும் 5வது இடத்தையே பெற்று அமைதியும் ஆறுதலும் பெற்றுக் கொண்டது.

1951 முதல் ஆசியப் போட்டிகளில் இரண்டாவது இடம் பெற்றிருந்த போது வென்ற பதக்கங்கள், இன்று 9வது

போட்டிகளிலே, அதற்கும் மேலாக 57 வெற்றிப்பதக்கங்களைப் பெற்றிருந்தாலும், இந்தியா 5வது இடத்தைத் தான் அடைய முடிந்தது.

நமது நாடு வளர்ச்சி பெற்றிருப்பது போலவே, மற்ற நாடுகளும் ஆற்றலில், நுண்திறனில் வளர்ந்திருக்கின்றன என்கிற உண்மையை நாம் ஒத்துக் கொண்டு தான் ஆகவேண்டும்.

இந்த ஆசியப் போட்டிகளில், இந்தியா வென்ற பதக்கங்களையும், அதன் வெற்றி நிலையான ஐந்தாவது இடத்தையும் நீங்கள் அறிந்திருக்கின்றீர்கள்.

இனி, இந்தியா பெற்றிருக்கும் பதக்கங்களின் வெற்றி சதவிகிதத்தையும் உங்கள் கண்ணோட்டத்திற்காகக் கீழே கொடுத்திருக்கிறேன்.

| ஆண்டு | மொத்தப் பதக்கங்கள் | வென்ற நாட்டின் எண்ணிக்கை | | இந்திய பதக்கம் | வெற்றி சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 1951 | 189 | 60 | —ஜப்பான் | 52 | 30% |
| 1954 | 203 | 85 | ,, | 18 | 9% |
| 1958 | 341 | 138 | ,, | 13 | 4% |
| 1962 | 373 | 152 | ,, | 34 | 9% |
| 1966 | 448 | 164 | ,, | 23 | 5% |
| 1970 | 411 | 144 | ,, | 25 | 6% |
| 1974 | 593 | 176 | ,, | 28 | 5% |
| 1978 | 627 | 178 | ,, | 28 | 4% |
| 1982 | 614 | 153 | சீனா | 57 | 9% |

1951ல் வெற்றி நிலை சதவிகிதம் 30ல் இருக்கிறது. 1982ல் நமது நிலை 9ல் இருக்கிறது.

என்ன நடந்திருக்கிறது? நாம் எங்கே இருக்கிறோம் என்பதை இப்பட்டியல் சுட்டிக் காட்டுகிறது.

பார்த்தபின் பேசாமல் இருப்பது பகுத்தறிவாளர்க்கு அழகாமோ! பாரதத்தின் புகழ் ஓங்க உங்கள் பங்கு என்ன என்பதையும் சிந்திக்க வேண்டுகிறோம்.

## எதிர்பாராத தோல்வி

முப்பதாயிரம் பார்வையாளர்கள், தப்பாத ஒரே ஆவலோடு துறுதுறுப்புடன், நேஷனல் ஸ்டேடியத்தில் அமர்ந்திருக்கின்றனர். ஜனாதிபதி, பிரதமர் இந்திராகாந்தி, துணை ஜனாதிபதி இதயதுல்லா மற்றும் நாட்டின் முக்கிய பிரமுகர்கள் எல்லாம், பரபரப்பான மனோபாவத்துடன் வீற்றிருக்கின்றனர்.

அத்தகைய ஆர்வம் ஊட்டிய போட்டி எது?

உலகக் கோப்பையை வென்று, ஆசியப் போட்டிக்கான வளைகோல் தங்கப்பதக்கத்தையும் வென்று, தம்மை மேலாக்கிக் கொண்டிருக்கும் பாகிஸ்தானுக்கும், மாஸ்கோ ஒலிம்பிக் போட்டியில் தங்கப்பதக்கம் பெற்ற இந்தியாவுக்கும் அல்லவா போட்டி....!

இந்திய மண்ணிலே, ஏகப்பட்ட ரசிகர்கள் முன்னிலையில் நடைபெறும் போட்டியின் முடிவை தெரிந்து கொள்ள அத்தனை வேகம் அத்தனை பெருக்கும்.

இந்தப் போட்டியில், இந்தியா வெற்றி பெற ஏராளமான வாய்ப்பு கிடைத்தாலும், இந்தியா படுபயங்கரமாகத் தோற்றது இதுவரையிலும் இந்தியா இப்படி தோற்றதே இல்லை. 7 கோல் வாங்கி, 1 கோல் போட்டு இந்தியா தோற்றது.

7 முறை இந்தியாவும் பாகிஸ்தானும் ஆசியப் போட்டிகளில் வெற்றி பெறுவதற்காக மோதிக் கொண்டிருக்கின்றன



110 மீட்டர் தடை தாண்டி ஓடும் காட்சி

அதில் ஒரே ஒருமுறைதான் இந்தியா வென்றிருக்கிறது. மீதி 6 போட்டிகளில் பாகிஸ்தான் வென்றிருக்கிறது.

இந்தப் போட்டியின் முடிவைப்பற்றி இப்படி விமர்சித்துக் கிண்டல் செய்தவர்களும் உண்டு.

அதாவது 7 முறை எதிர்த்துப் போட்டியிட்டதற்காக இந்தியாவுக்கு 7 கோல் போட்டு, பாகிஸ்தான் தன் தலைமையை நிலை நாட்டிக் கொண்டது. ஆனால் இந்தியாவோ, தான் ஒருமுறை ஜெயித்ததை நினைவுபடுத்துவதற்காக, ஒரே ஒரு கோல் போட்டுக் காட்டியது என்பது எப்படி?

உலக அரங்கிலே பிரபல வளைகோல் பந்தாட்ட நாடுகளான பாகிஸ்தானும் இந்தியாவும் இதுவரை இந்த ஆசியப் போட்டியையும் சேர்த்து 32 முறை, இறுதிப் போட்டிகளில் சந்தித்து இருக்கின்றன.

இதில் பாகிஸ்தான் 20 முறை வென்றுள்ளது. இந்தியா 8 முறைகள் தான் வெற்றி பெற்றுள்ளது. 4 முறைகள் தான் வெற்றி தோல்வியில்லாமல் சமநிலை அடைந்திருக்கின்றன.

இனி வருங்காலம் எப்படி அமையுமோ? நமது விளையாட்டுத் தலைமை என்ன செய்யுமோ? பொறுத்திருந்து பார்க்கலாமே!

அதற்குள்ளே ஒரு எதிர்பாராத வாய்ப்பு இந்தியாவிற்கே கிடைத்து விட்டது.

ஆஸ்திரேலியாவில் உள்ள மெல்போர்ன் நகரில், செண்டா கோப்பைக்கான போட்டி நடைபெற்றது.

இந்தியாவை 7—1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்த பாகிஸ்தான், இந்தப் போட்டியில் 1—2 என்ற கோல் கணக்கில் இந்தியாவிடம் தோற்றுப்போனது.

அதுமட்டுமல்ல; மீண்டும் பாகிஸ்தான் ஹாலந்து அணியிடம் 3—6 என்ற கோல் கணக்கில் தோற்றதோடல்லாமல், அரை இறுதிப் போட்டியில் கலந்து கொள்ளும் வாய்ப்பினையும் இழந்து வெளியேறியது.

இந்தியா ஆஸ்திரேலிய அணியிடம் 18-12-82ந் தேதி விளையாடி 6 கோல் வாங்கித் தோற்று, வெள்ளிப்பதக்கத்தைப் பெற்றது. பாகிஸ்தான் தோற்று 5வது நாடாகப் போனது.

# 15. வெற்றியாளர்களும் சாதனைகளும்

## தனித்திறன் போட்டிகள் : ஆண்கள்

| போட்டி நிகழ்ச்சி | நாடு | புதிய சாதனை | பழைய சாதனை |
|---|---|---|---|
| 1 100 மீட்டர் விரைவோட்டம் | | | |
| 1 ரபுவான் பிட் | மலேசியா | | |
| 2 ஜாகுவேன் ஜாங் | தென்கொரியா | | |
| 3 சூசார்ட் ஜேசுர்பார்ப் | தாய்லாந்து | | |
| பிட் ஓடிய நேரம்—10.68வி | | | |
| 2 200 மீட்டர் விரைவோட்டம் | | | |
| 1 ஜே குயான் ஜாங் | தென்கொரியா | 20.89வி | 21.08 |
| 2 டோஷியோ டயடோ | ஜப்பான் | | |
| 3 ரபுவான் பிட் | மலேசியா | | |
| 3 400 மீட்டர் விரைவோட்டம் | | | |
| 1 சுசுமு துகாரே | ஜப்பான் | | |
| 2 பிரேம சந்திரன் | இந்தியா | | |
| 3 சுங்கி குவோ | சீனா | | |
| ஓடிய நேரம்—46.65 விநாடி | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| **4** | **800 மீட்டர் ஓட்டம்** | | | |
| 1 | சார்லஸ் பரோமியா | இந்தியா | 1நி.46.81வி | — |
| 2 | போக்ஜூ கிம் | தென்கொரியா | | |
| 3 | பாலே ஜாரலா | இராக் | | |
| **5** | **1500 மீட்டர் ஓட்டம்** | | | |
| 1 | பாலே ஜாரலா | இராக் | 3நி.43.49வி | 3நி.47.60வி |
| 2 | யுடாகா ஹிராய் | ஜப்பான் | | |
| 3 | சுரேஷ் யா வ் | இந்தியா | | |
| **6** | **300 மீ தடங்கல் ஓட்டம்** | | | |
| 1 | தடாசு கவாசே | ஜப்பான் | — | — |
| 2 | கோபால் சைனி | இந்தியா | | |
| 3 | ஹக்டர் பேகியோ | பிலிப்பைன்ஸ் | | |
| | ஓடிய நேரம் 8.47,36 | | | |
| **7** | **5000மீ ஓட்டம்** | | | |
| 1 | மசாயா ஷின்டகு | ஜப்பான் | 13.53.74வி | 14.20.6 |
| 2 | குவோவி ஜாங் | சீனா | | |
| 3 | ராஜ்குமார் | இந்தியா | | |
| **8** | **10,000மீ ஓட்டம்** | | | |
| 1 | ஜாங் குவோவி | சீனா | 29நி 37.56வி | |
| 2 | கென்ஜூ இடா | ஜப்பான் | | |
| 3 | கேன் யாக் | வடகொரியா | | |

| | | | |
|---|---|---|---|
| 9 மாரதான் ஓட்டம் | | | |
| 1 யாங் கான் கிம் | தென்கொரியா | 2ம 22நி.21வி | 2ம.21 2வி |
| 2 பியூமிகி அபே | ஜப்பான் | | |
| 3 சீதாராமா | இந்தியா | | |
| 10 110மீ. தடை தாண்டி ஓட்டம் | | | |
| 1 யோஷ்பூமி ப்யூஜிம்மொரி | ஜப்பான் | 14 09வி | 14.26வி |
| 2 ஜாங் ஷென் ஜெங் | சீனா | | |
| 3 பிரவின் ஜாலி | இந்தியா | | |
| 11 400மீ. தடை தாண்டி ஓட்டம் | | | |
| 1 தகாஷி நகாவோ | ஜப்பான் | 50.60வி | — |
| 2 ஷிகன்ரி ஓமோரி | ஜப்பான் | | |
| 3 அகமத் ஜசீம் ஹமாடா | பஹ்ரைன் | | |
| 12 4X100 மீ. தொடரோட்டம் | | 39.82வி | — |
| 1 சீனா | | | |
| 2 தாய்லாந்து | | | |
| 3 ஜப்பான் | | | |
| 13 4X400மீ. தொடரோட்டம் | | 3நி 06.75வி | நி3 07.4 |
| 1 ஜப்பான் | | | |
| 2 இராக் | | | |
| 3 சீனா | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| **14** | **20 கி மீ நடை** | | | |
| 1 | சாந்த்ராம் | இந்தியா | 1ம.29நி.29வி | 1ம31நி 54.90வி |
| 2 | வாங் சுன்டாங் | சீனா | | |
| 3 | பியூசின் | சீனா | | |
| **15** | **50 கி மீ நடை** | | | |
| 1 | சுண்டாங் வாங் | சீனா | 4ம.9நி.36வி | — |
| 2 | சியாங் கியூ | சீனா | | |
| 3 | அகிரா பியூஜிசாகி | ஜப்பான் | | |
| **16** | **நீளத் தாண்டுதல்** | | | |
| 1 | சோங் இ கிம் | தென்கொரியா | — | — |
| 2 | லியூ யோகுவாங் | சீனா | | |
| 3 | ஜுனி சி ஷு<br>தாண்டிய தூரம்—7.94மீ | ஜப்பான் | | |
| **17** | **உயரத் தாண்டுதல்** | | | |
| 1 | ஜி ஜு யான் ஹ்வா | சீனா | 2.33மீ | — |
| 2 | காய் சூ | சீனா | | |
| 3 | சகமோடா | ஜப்பான் | | |
| **18** | **மும்முறைத் தாண்டல்** | | | |
| 1 | சூஜென் சியான் | சீனா | 16.80மீ. | — |
| 2 | யாசுகி உவேடா | ஜப்பான் | | |
| 3 | எஸ். பாலசுப்ரமணியன் | இந்தியா | | |

| | | | |
|---|---|---|---|
| **19. கோல் ஊன்றித் தாண்டல்** | | 5.30மீ. | 5.10மீ |
| 1 தமோமி தகாஹாஷி | ஜப்பான் | | |
| 2 கமியா டெருஹிஷா | ஜப்பான் | | |
| 3 செங்ஜாங் | சீனா | | |
| **20. இரும்புக் குண்டு எறிதல்** | | 18.58 | 18.04மீ |
| 1 பகதூர் சிங் | இந்தியா | | |
| 2 முகமது அலி ஜிஸ்காட் | குவைத் | | |
| 3 பல்வீந்தர்சிங் | இந்தியா | | |
| **21. தட்டெறிதல்** | | 58.50 | 56.82 |
| 1 லீவிஜென் | சீனா | | |
| 2 சல்தீப்சிங் | இந்தியா | | |
| 3 லீஜெங் | சீனா | | |
| **22. வேலெறிதல்** | | | |
| 1 தோஷிகா தகேடா | ஜப்பான் | | |
| 2 யூன் யுங்யாங் | தென்கொரியா | | |
| 3 குருதேஜ்சிங் | இந்தியா | | |
| எறிந்த தூரம் 75.04மீ. | | | |
| **23. சங்கிலிக்குண்டு வீசுதல்** | | 71.14மீ. | 68.25மீ. |
| 1 ஷிகனேபு முரோபுசி | ஜப்பான் | | |
| 2 மசயூகிகவாடா | ஜப்பான் | | |
| 3 இன் குய்சீய் | சீனா | | |
| **24. பத்து நிகழ்ச்சிப் போட்டி** | | 7481 வெற்றி எண்கள் | |
| 1 வாங்சான் சியாங் | சீனா | | |
| 2 சாய்இன் கியான் | சீனா | | |
| 3 சலேவி | குதார் | | |

### பெண்கள்

**1. 100 மீ. விரைவோட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 1 | லிடியா டிவேகா | பிலிப்பைன்ஸ் | |
| 2 | பி. டி. உஷா | இந்தியா | |
| 3 | மியங் ஹிமோ | தென்கொரியா | |

ஓடிய நேரம்—11.76 விநாடிகள்

**2. 200 மீ. விரைவோட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 1 | ஹிரோமி இசோசாகி | ஜப்பான் | |
| 2 | பி. டி. உஷா | இந்தியா | |
| 3 | மியுங் ஹிமோ | தென்கொரியா | |

ஓடிய நேரம்—24.22வி.

**3. 400 மீ. விரைவோட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 1 | ஹிரோமி இசோசாகி | ஜப்பான் | 54.48வி. |
| 2 | ஜீங்கோ | ஜப்பான் | |
| 3 | பத்மினி தாமஸ் | இந்தியா | |

**4. 800 மீ. ஓட்டம்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | யாங்இசாங் | வடகொரியா | 2.05.69வி | 2.06.5வி. |
| 2 | கீதாஜுட்ஷி | இந்தியா | | |
| 3 | குமேர்குவா | சீனா | | |

**5. 1500 மீ. ஓட்டம்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | யாங் இ சாங் | வடகொரியா | 4.16.4வி | 4.18.9வி |
| 2 | கீதா ஜுட்ஷி | இந்தியா | | |
| 3 | ஓக்சான் கிம் | வடகொரியா | | |

**6. 3000 மீ. ஓட்டம்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | ஓக்சன்கிம் | வடகொரியா | | |
| 2 | சன்ஹீவாகிம் | வடகொரியா | | |
| 3 | ஷிகை இ ஜூஒட்சு | ஜப்பான் | | |
| | ஓடிய நேரம் நி9.30.22.2 | | | |

**7. 100 மீ. தடை தாண்டி ஓட்டம்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | எமி அகிமோடா | ஜப்பான் | | |
| 2 | சிசூகோ அகிமோடா | ஜப்பான் | | |
| 3 | ஜியான் சு தாய் | சீனா | | |
| | ஓடிய நேரம் 13.63.வி. | | | |

**8. 400 மீ. தடை தாண்டி ஓட்டம்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | டி. வலசம்மா | இந்தியா | 58.47வி. | 61.32வி. |
| 2 | யுமிகா ஆய் | ஜப்பான் | | |
| 3 | குயிவுகாவியூ | சீனா | | |

**9. 4X100 மீ. தொடரோட்டம்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | ஜப்பான் | | 45.13வி. | 46.20 |
| 2 | தாய்லாந்து | | | |
| 3 | தென்கொரியா | | | |

**10. 4X400 மீ. தொடரோட்டம்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | ஜப்பான் | | 3.37.44வி. | 3.48.5வி. |
| 2. | இந்தியா | | | |
| 3 | சீனு | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| **11** | **நீளத்தாண்டும் போட்டி** | | | |
| 1 | வென் பன் லியோ | சீனு | 6.41மீ. | 6.81மீ. |
| 2 | மெர்சி மாத்யூஸ் | இந்தியா | | |
| 3 | ஹியாங்லீ | சீனு | | |
| **12** | **உயரத் தாண்டுதல்** | | | |
| 1 | ஜெங் தாஸேன் | சீனு | 1.89மீ | 1.68மீ. |
| 2 | ஹசாயோ புருமிட்சு | ஜப்பான் | | |
| 3 | வென் கின் யாங் | சீனு | | |
| **13** | **இரும்புக்குண்டு எறிதல்** | | | |
| 1 | மிசுலீ | சீனு | 17,77மீ. | 17,70மீ |
| 2 | லீஜூவென்ஷென் | சீனு | | |
| 3 | தேசுகோ வடாசி | ஜப்பான் | | |
| **14** | **தட்டெறிதல்** | | | |
| 1 | லீ சியா சூ | சீனு | 57.24மீ. | 56,92மீ. |
| 2 | சின் சியா ஓயன் | சீனு | | |
| 3 | சிசூகி | ஜப்பான் | | |
| **15** | **வேலெறிதல்** | | | |
| 1 | எமிமட்சுயி | ஜப்பான் | 60.50மீ. | |
| 2 | லிசபன் | சீனு | | |
| 3 | பிஞர்மேரி | ஜப்பான் | | |
| **16** | **ஏழு நிகழ்ச்சிப் போட்டிகள்** | | | |
| 1 | பெய்சு | (சீனு) | 5594 வெற்றி எண்கள் | |
| 2 | லீ லியானியிங் | (சீனு) | | |
| 3 | டோமிகோ உச்சிட | ஜப்பான் | | |

16

# பதக்கங்களின் பட்டியல் - ஒரு கண்ணோட்டம்

இந்தியாவில் நடந்த ஆசிய விளையாட்டுக்களில் எந்தெந்த நாடு எத்தனை எத்தனைப் பதக்கங்களைப் பெற்றிருக்கின்றன என்ற பட்டியலை கீழே தந்திருக்கிறோம். நாடுகளின் வீரர்கள் கணக்குப்படி அல்ல—வீரர்கள் பெற்ற பதக்கங்கள் தான் முக்கியம் என்பதை நினைவூட்டவும் நிலைமையை உணரவும் இந்தப் பட்டியல் உதவும்.

| எண் | நாடு | தங். | வெள். | வெண் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1. | சீனா | 61 | 51 | 41 | 153 |
| 2. | ஜப்பான் | 57 | 52 | 44 | 153 |
| 3. | தென் கொரியா | 28 | 28 | 37 | 93 |
| 4. | வடகொரியா | 17 | 19 | 20 | 56 |
| 5. | இந்தியா | 13 | 19 | 25 | 57 |
| 6. | இந்தோனேஷியா | 4 | 4 | 7 | 15 |
| 7. | ஈரான் | 4 | 4 | 4 | 12 |
| 8. | மங்கோலியா | 3 | 3 | 1 | 7 |
| 9. | பாகிஸ்தான் | 3 | 3 | 5 | 11 |
| 10. | பிலிப்பைன்ஸ் | 2 | 3 | 9 | 14 |
| 11. | இராக் | 2 | 3 | 4 | 9 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 12. | தாய்லாந்து | 1 | 5 | 6 | 10 |
| 13. | குவைத் | 1 | 3 | 3 | 7 |
| 14. | சிரியா | 1 | 1 | 1 | 3 |
| 15. | மலேசியா | 1 | — | 3 | 4 |
| 16. | சிங்கப்பூர் | 1 | — | 2 | 3 |
| 17. | ஆப்கானிஸ்தானம் | — | 1 | — | 1 |
| 18. | லெபனான் | — | 1 | — | 1 |
| 19. | பக்ரைன் | — | — | 1 | 1 |
| 20. | ஹாங்காங் | — | — | 1 | 1 |
| 21. | வியட்நாம் | — | — | 1 | 1 |
| 22. | குதார் | — | — | 1 | 1 |
| 23. | சவுதி அரேபியா | — | — | 1 | 1 |

எந்த ஆசியப் போட்டிகளிலும் இந்தியா 15 தங்கப் பதக்கங்களுக்கு மேல் பெறவே இல்லை. இந்த ஆசியப் போட்டிகளில் தான் இந்தியா, அதிக எண்ணிக்கையில், அதாவது 13 தங்கப் பதக்கங்களைப் பெற்றிருக்கிறது.

இது வரை இந்தியா பெற்ற தங்கப் பதக்கங்களின் பட்டியலைக் கீழே தந்திருக்கிறோம். நம் நாட்டின் வெற்றி வளர்ச்சிபற்றிய வரலாற்றை அறிந்து கொள்வதற்காக!

| எண் | ஆண்டு | இடம் | தங் | வெள் | வெண் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | 1951 | டில்லி | 15 | 16 | 21 | 52 |
| 2. | 1954 | மணிலா | 5 | 4 | 9 | 18 |
| 3. | 1958 | டோக்கியோ | 5 | 4 | 4 | 13 |
| 4. | 1962 | ஜாகர்தா | 10 | 13 | 11 | 34 |
| 5. | 1966 | பேங்காங் | 7 | 3 | 11 | 21 |
| 6. | 1970 | பேங்காங் | 6 | 9 | 10 | 25 |
| 7. | 1974 | டெஹ்ரான் | 4 | 12 | 12 | 28 |
| 8. | 1978 | பேங்காங் | 11 | 11 | 6 | 28 |
| 9. | 1982 | டில்லி | 13 | 19 | 25 | 57 |

நாம் அடைந்த வெற்றிகளை இங்கே பார்த்தோம். அடைய வேண்டிய தூரமும், பெற வேண்டிய வெற்றியும், கொள்ள வேண்டிய முயற்சியும், கொடுக்க வேண்டிய பயிற்சியும் இன்னும் எவ்வளவோ இருக்கிறது என்பதைத் தானே இந்தப் பட்டியல் நமக்கு பறை சாற்றுகிறது !

நிலையை உணர்ந்து நிறைவாக்கிக் கொள்வது தானே நிறை குணத்தார்க்கு அழகு !

இந்தியா மொத்தம் 57 பதக்கங்களை வென்றிருக்கிறது என்று நாம் அறிந்தோம். அவைகள் எந்தெந்தப் போட்டிகளில்; வெல்லப்பட்டன என்ற விவரத்தையும் இனி இங்கே காண்போம்.

---



இந்திய வீராங்கனை கமல்ஜித் சாந்து
400 மீட்டர் ஓட்டத்தில் வெற்றி பெற்ற காட்சி

| விளையாட்டுக்கள் | | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1. | ஓடுகளப் போட்டிகள் | 4 | 9 | 8 | 21 |
| 2. | குத்துச்சண்டை | 1 | 2 | 3 | 6 |
| 3. | குதிரையேற்றம் | 3 | 1 | 1 | 5 |
| 4. | பூப்பந்து | — | — | 5 | 5 |
| 5. | மல்யுத்தம் | 1 | 1 | 2 | 4 |
| 6. | பாய்மரப்படகுப் போட்டி | 1 | 1 | 1 | 3 |
| 7. | கோல்ப் | 2 | 1 | — | 3 |
| 8. | துப்பாக்கிசுடுதல் | — | 2 | 1 | 3 |
| 9. | பளுதூக்குதல் | — | — | 2 | 2 |
| 10. | வளைகோல்பந்தாட்டம் (மகளிர்) | 1 | — | — | 1 |
| 11. | வளைகோல்பந்தாட்டம் (ஆண்கள்) | — | 1 | — | 1 |
| 12. | நீர்பந்தாட்டம் (போலோ) | — | — | 1 | 1 |
| 13. | டென்னிஸ் | — | 1 | — | 1 |
| 14. | துடுப்புப்படகுப் போட்டி | — | — | 1 | 1 |
| | மொத்தம் | | | | 57 |

ஓடுகளப்போட்டிகளில் 21 பதக்கங்கள் பெற்றோம் என்ற பட்டியலைப் பார்த்தவுடன், யார் அந்த வெற்றி வீரர்கள் வீராங்கனைகள் என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா! இதோ!

I. தங்கம் பெற்ற வீரர்கள் வீராங்கனைகள்

| | | |
|---|---|---|
| 1. | சார்லஸ்பொரோமியோ | 400மீ. ஓட்டம் |
| 2. | சாந்த்ராம் | 20 கி மீ நடை |
| 3. | பகதூர் சிங் | இரும்புக்குண்டு எறிதல் |
| 4 | வலசம்மா | 400மீ. த. தா. ஓட்டம் |

II. வெள்ளி பெற்றவர்கள்

| | | |
|---|---|---|
| 1. | கே. பிரேம சந்திரன் | 400மீ ஓட்டம் |
| 2. | கோபால் சய்னி | 3000மீ. தடங்கல் ஓட்டம் |
| 3. | குல்தீப்சிங் | தட்டெறிதல் |
| 4. | P. T. உஷா | 100 மீட்டர் ஓட்டம் |
| 5. | P. T. உஷா | 200மீட்டர் ஓட்டம் |
| 6. | கீதா ஜுட்ஷி | 800 மீ. ஓட்டம் |
| 7. | கீதா ஜுட்ஷி | 1500 மீ. ஓட்டம் |
| 8. | மேரிமத்யூ குட்டன் | நீளம் தாண்டுதல் |
| 9. | ரீட்டாசென், அமீதாபானு வலசம்மா, பத்மினிதாமஸ் | 4X400மீ தொடரோட்டம் |

III. வெண்கலம் வென்றவர்கள்

| | | |
|---|---|---|
| 1. | சுரேஷ்யாதவ் | 1500மீட்டர் |
| 2. | பர்வீன் ஜாலி | 110மீ. த. தா. ஓட்டம் |
| 3. | ராஜ்குமார் | 3000 மீ. ஓட்டம் |
| 4. | எஸ். சீதாராமா | மாரதான் ஓட்டம் |
| 5. | பல்வீந்தர்சிங் | குண்டு எறிதல் |
| 6. | குர்தேஜ்சிங் | வேலெறிதல் |
| 7. | எஸ். பாலசுப்ரமணியன் | மும்முறைத்தாண்டல் |
| 8. | பத்மினிதாமஸ் | 400 மீட்டர் ஓட்டம் |

# 17

# நினைவில் நிறைந்த நிறைவு விழா!

15 நாட்கள் மிகவும் கம்பீரமாகவும், கோலாகலத்தோடும் நடைபெற்ற ஒன்பதாவது ஆசிய விளையாட்டுப் போட்டிகள், டிசம்பர் 4ம் தேதியன்று, அதாவது 16ம் நாளன்று ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கில் நிறைவு விழாவாக, மிக நேர்த்தியான முறையில் அரங்கேறி மிளிர்ந்தது.

33 நாடுகளிலிருந்து வந்து பங்கு பெற்ற வீரர்கள், வீராங்கனைகள், குழு மேலாளர்கள் அனைவரும் அணிவகுத்து வரும் நிகழ்ச்சியானது, ஆசிய விளையாட்டுக் கழகத்தின் தலைவர் பலீந்தர்சிங், அரங்கத்திற்குள் வந்த நேரமான மாலை 3.30க்குத் தொடங்கியது.

வீர உணர்வோடும், குறுகுறுக்கும் நெஞ்சோடும், நாளை எப்படி என்ற பதைபதைப்போடும், அதே நேரத்தில் நிமிர்ந்த நெஞ்சோடு நேர் கொண்ட பார்வையுடன் கம்பீரமாக முதல் நாள் நடைபயின்ற வீரர்களா இவர்கள்? என்கிற அளவிலே, இந்த இறுதி நாள் அணிவகுப்பில் எல்லோரும் நடந்து வந்தனர்.

வெற்றி வீரர்கள், வெற்றியை இழந்தவர்கள், வெற்றியை அடையும் ஆற்றலிருந்தும் விதிவசத்தால் தோற்றவர்கள்

எல்லோரும், பிரியப்போகிறோமே என்ற பாச உணர்வில் ஊறிக்கிடந்தனர். உணர்ச்சியின் எழுச்சியால் அவர்கள் நடந்து வந்த காட்சி மிகவும் உருக்கமாக இருந்தது.

போட்டிகள் நடந்த போர்க்களமாக அந்த அரங்கம் தெரியவில்லை. பல்வேறு மொழி பேசும் மக்கள், பாச உணர்வுடன் கலந்து உறவாடிய உள்ளம் பொங்கிய நெகிழ்ச்சி தான் அந்த அரங்கம் முழுவதும் நிறைந்து கிடந்தது.

ஆற்றல்மிகு வீரர்களின் அலங்கார அற்புதமான அணி வகுப்பு நடைபெற்றது. அத்தனை பேரும் கொடிக்கம்பங்களுக்கு முன்பாக வந்து நின்றவுடன், மூன்று கொடிகள் ஏற்றப் பட்டன.

அதாவது. ஆசிய விளையாட்டுக் கழகத்தின் கொடி 9வது ஆசிய விளையாட்டை நடத்திய இந்திய நாட்டின் மூவண்ணக் கொடி: 1986ல் 10வது ஆசிய விளையாட்டுப் போட்டிகளை நடத்த இருக்கும் தென் கொரியா நாட்டின் கொடி ஆகிய மூன்று கொடிகளும், பாண்டு வாத்திய இன்னிசை முழக்கத் திற்கிடையே ஏற்றப்பட்டன.

அதன் பிறகு. கொடி கம்பங்களுக்கு எதிரே அமைக்கப் பட்டிருந்த மேடையில், ஏறி நின்ற பலீந்தர் சிங். கழகத்தின் தலைவர் என்கிற முறையில், விளையாட்டு அமைப்பாளர் களுக்கும், முக்கியத் தலைவர்களுக்கும் நன்றி தெரிவித்தார். பின்னர் 'இந்த ஒன்பதாவது ஆசிய விளையாட்டுக்கள் முடிவடைந்தன. உங்களையெல்லாம் நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு சந்திக்க அழைக்கிறேன்' என்று கூறி விழா நிறைவினை முறைப்படி அறிவித்தார்.

அறிவிப்பினைத் தொடர்ந்து, ஆயிரக்கணக்கான வீரர் களும் வீராங்கனைகளும், தங்களுக்கென்று குறிக்கப்பட்டுள்ள இருக்கைகளில் சென்று அமர்ந்ததும், பலதரப்பட்ட சுவை யான காட்சிகள் பார்வையாளர்களுக்குப் பரிமாறப்பட்டன.

ஜனாதிபதியின் 61வது குதிரை காவல் படையினைச் சேர்ந்த 32 குதிரைகளும், அவற்றை ஓட்டிய வீரர்களும், மிக நேர்த்தியான வீர தீர நிகழ்ச்சி ஒன்றை நிகழ்த்திக் காட்டினார்கள். குதிரைகள் எந்தவிதமான தயக்கமும் இன்றி, ஒரு கட்டுப்பாட்டுக்குள் அடங்கி நடை பிறழாது, லயம் தவறாது கோணாது நடந்து கொண்டன என்ற காட்சி, காண்போர்களை வியந்து, தங்களை மறந்து பாராட்டவைத்தன.

பாண்டு வாத்தியக் குழுவினர்கள், இசையை இசைத்துக் கொண்டே, இம்மியும் பிசகாமல் அணி நடை நடந்தும், வெவ்வேறு பாணிகளில் வியூகம் அமைத்து நடந்ததும், ASIAD 82 என்பதாக நின்றதும், கண்கொள்ளாக் காட்சியாக அமைந்திருந்தது.

வியந்து மகிழ்ந்து இருந்து 72000 பார்வையாளர்கள் மத்தியிலே, உள்ளத்தை உருக்கும் நிகழ்ச்சி ஒன்றும் நடந்தேறியது.

நாட்டுக்குள்ளே இருந்து வந்த ஒரு சூழ்நிலை மாறி, அழகான காட்டுக்குள்ளே தான் வந்து விட்டோமா என்கிற உணர்வினை உசுப்பி விடும் வகையிலே, சிங்கங்களும், பசுக்களும் பறவைகளும், மயில்களும், காளைகளும் சுற்றிச் சூழ்ந்து நடனமாடி வர: ஒரு வாகனத்தில் வண்ண மலர்களால் உருவான 'அப்பு' அரங்கத்தில் நுழைந்தது.

'அன்புள்ள அப்புவே! உனக்கு நன்றி! சென்றுவா' என்ற வாசகம் மின்னணு காட்சிப் பலகையில் மின்னிக் கொண்டிருந்தன.

துள்ளும் துடிப்புடன் காட்சியளிக்கும் அப்புவின் கண்களில், பிரிவாற்றுமை தாங்காது கண் கலங்கும் அமைதியான முகபாவத்துடன் அப்புவை உருவாக்கியிருந்தார்கள். அந்தக் காட்சி அனைவரையும் ஓர் இனம் புரியாத சோகத்தில் ஆழ்த்திவிட்ட தென்றே கூறலாம்.

பொய்க்கால் குதிரை ஆட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம் நடைபெற, பண்டிட் ரவிசங்கர் இயற்றித்தந்த இசை மிகவும் பொருத்தமாக அமைந்திருந்தது.

பின்பு, 112 குழல் ஊதுபவர்கள் ஒன்றாக இருந்து, உரத்த இசையில் குழலூத; எழுபத்திரெண்டாயிரம் ரசிகர்கள் எழுந்து மௌனமாக நிற்க, கொடிக்கம்பங்களிலிருந்து மூன்று கொடிகளும் இறக்கப்பட்டன.

சரியாக 4 மணி 16 நிமிட அளவில், புனித ஆசிய ஜோதி அணைக்கப்பட்டது.

ஆசிய விளையாட்டு விழாவின் கொடியும்; 1951ல் நடைபெற்ற முதல் ஆசிய விளையாட்டுக்களில் பயன்படுத்தப் பட்ட ஆடம்பரவிளக்கும், டில்லியில் உள்ள லெப்டினென்ட் கவர்னர் திரு. ஜக்மோகனிடம் ஒப்படைக்கப்பட்டது. இவர், 1986ம் ஆண்டு, தென் கொரியாவில் உள்ள சியால் நகரில் நடைபெற இருக்கும் 10வது ஆசிய விளையாட்டு நடைபெறும் வரை, இந்தக் கொடியைப் பாதுகாத்து வைத்திருப்பார். 9 வது ஆசிய விளையாட்டுப் போட்டிகள் இனிதாக நிறைவு பெற்றன என்பதைக் குறிக்கும் வகையில் 5 முறை பீரங்கிகள் முழங்கின

மனிதாபிமானத்துடனும், சகோதர பாசத்துடனும், 1986ம் ஆண்டு தென் கொரிய நாட்டின் சியோல் நகருக்கு ஒன்றுசேர வாருங்கள் என்று ஆசியக் கண்டத்தின் அத்தனை நாட்டு இளைஞர்களுக்கும் மக்களுக்கும் விடுத்த பலீந்தர் சிங்கின் அழைப்பு, வெற்றியாகப் பலித்திட, இந்திய இளைஞர்கள் இன்றிலிருந்தே உழைத்திட வேண்டும்.

அதுவே, நாம் வெற்றிகரமாக நடத்திய ஆசிய விளையாட்டுப் போட்டிகளுக்குக் கொடுக்கின்ற பிரதிபலனாக அமையும்.

# 18

# சில சுவையான தகவல்கள்

**எதிர்நீச்சல்**

நீச்சல் போட்டியென்றால் ஜப்பான் நாட்டைத்தான் எல்லோரும் நினைவு கூறவேண்டும் என்ற வகையிலே, ஜப்பானின் ஆதிக்கம் தலை தூக்கியிருந்தது.

நீச்சல் போட்டிகளுக்கான மொத்தப் பதக்கங்கள் 102. ஜப்பான் வென்ற பதக்கங்களின் எண்ணிக்கை 45. அதில் 21 தங்கம், 14 வெள்ளி, 10 வெண்கலம் அடங்கும்.

எங்களை விட்டால் வேறு யாரும் போட்டியிடமுடியாது என்று எதிர் சவால் விட்டது சீனா. அது பெற்ற பதக்கங்கள் 30. அதில் 8 தங்கம், 14 வெள்ளி, 8 வெண்கலம் அடங்கும்.

21 புதிய சாதனைகள் இதில் ஏற்பட்டிருக்கின்றன.

**லட்சிய வெற்றி**

சீருடற் போட்டியில் வென்ற வீராங்கனை சீனாவைச் சேர்ந்த சென்யோங்யான் வயது 20. அவரது லட்சியம் இந்த

ஆசியப் போட்டியில் தங்கப்பதக்கம் பெற்றது போலவே வரப் போகின்ற ஒலிம்பிக் பந்தயத்திலும் தங்கம் வெல்வது என்பது தான்.

ஆசியப்போட்டியில் வெற்றி பெறும் இலட்சியத்திற்காக அந்தப் பெண் செய்த பயிற்சி-8 ஆண்டுகளாகத் தொடர்ந்து தினந்தோறும் 4 மணி நேரம் இடைவிடாத பயிற்சி தான்.

முயற்சியில் குன்றினால் முன்னேற்றம் ஏது? எண்ணத்தில் மாறினால் இலட்சியம் தான் ஏது?

## தோற்பதிலும் சாதனை

மகளிர் வளைகோல் பந்தாட்டத்தில் ஹாங்காங் அணி ஒரு சாதனை செய்திருக்கிறது. ஆமாம்! எதிர்க்கும் அணிக்கு கோல் போட முடியாத அந்த அணி. 3 முறை போட்டியிட்டு மொத்தம் 36 'கோல் வாங்கியிருக்கிறது...

எப்படிப்பட்ட திறமை இந்த அணிக்கு?

## வயது என்ன செய்யும்?

உலகக் கால் பந்துக் கோப்பைக்கான போட்டியில் வென்ற இத்தாலி நாட்டு அணியின் தலைவன் டினோஜாப்க்கு வயது 40 என்கிறார்கள். இந்த வயதிலுமா விளையாட்டு என்றார்கள்.

ஆணுக்குப் பெண் சளைத்தவர்கள் அல்லர் என்று வயது விஷயத்திலும் விளையாட வந்து சாதனை செய்திருக்கிறார் ஒரு பெண்மணி.

மலேசியா நாட்டு வளைகோல் பந்தாட்டக் குழுவில் ஒருவரான டாப்னேபோட்வில் என்பவருக்கு வயது 41.

அதிக வயதான அவருக்கு நேர்மாறாக, இளைய ஆட்டக்காரியாக இருந்தவர் 16 வயது பள்ளி மாணவி. தென்கொரியாவைச் சார்ந்த வோ நாம்லி என்னும் வீராங்கனை.

வயதும் பருவமும் திறமைக்கு முன்னே வளைந்து கொடுத்து விட்டு ஒதுங்கிக் கொள்ளும் என்பது உண்மையல்லவா !

## ஆட்டத்திலே அந்தஸ்து பார்ப்பது இல்லையே!

இங்கிலாந்து நாட்டு இளவரசி ஆன் என்பவர், ஒலிம்பிக் பந்தயத்தில் குதிரை சவாரிப் போட்டியில் கலந்து கொண்டார். இராணியாக இருந்தாலும், எல்லா விதிகளுக்கும் உட்பட்டு, கட்டுப்பட்டு கலந்து கொண்டாக வேண்டுமே ! அங்கே அந்தஸ்து ஏது ? பதவி, பணம், பாரம்பரியம், பெருமை எல்லாம் விளையாட்டுத்துறையில் எடுபடாது என்பதற்கு இது போல் பல சான்றுகள் உண்டு.

பிலிப்பைன்ஸ் நாட்டின் பிரதமருடைய மருமகள் குதிரை சவாரிப் போட்டியில் கலந்து கொண்டார். இந்த ஆசியப் போட்டியில் தான். மாதில்லா விராதா குதிரை சவாரி செய்யும் பொழுது. கீழே விழுந்து மயக்க மடைந்து விட்டார். காயமடைந்து போனது அவர் ஓட்டிய குதிரை. அவரே போட்டியிலிருந்து விலகிக் கொண்டார். அவரது ஆர்வத்தையும் முயற்சியையும் நாம் பாராட்டலாம்.

## பெண் நடுவர்

ஆண்கள் தாம் நடுவர்களாகப் பணிபுரிய வேண்டும் என்பதில்லை. பெண் நடுவரும் ஒருவர் மேசைப் பந்தாட்டப் போட்டியில் உலவினார். மதுசேத்தி என்பது அவர் பெயர் வாழ்க அவரது முன்னேற்றம்.

## புதியதலைவர்

ஆசிய கால்பந்தாட்டக் கழகத்தின் புதிய தலைவராக மலேசிய நாட்டினரான டாடோ ஹாஜி ஹமா ஜாஸ் என்பவர் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இவரது பதவிக் காலம் 4 ஆண்டுகள். (1982 — 1986).

## தங்க மனிதர்

இந்தியாவின் கோல்ப் ஆட்ட வீரரான லட்சுமண் சிங் என்பவர் ஆசிய கோல்ப் வெற்றி வீரர் என்ற பட்டத்தைத் தங்கப்பதக்கம் வென்று பெருமை பெற்றார்.

## அப்படி ஓர் அதிர்ஷ்டம்

போட்டியில்லாமல் தங்கப் பதக்கம் வருகிறதென்றால் அது அதிர்ஷ்டம் தானே! அந்த அதிர்ஷ்டசாலி ஈரான் நாட்டைச் சார்ந்த சுக்தேசராய் ஆவார்.

அவருடன் குத்துச்சண்டை அதிகக் கன எடை இறுதிப் போட்டியில் போட்டியிட இருந்த ஈராக் நாட்டைச் சேர்ந்த பர்ஹான் வரவில்லை. அதனால் சுக்தே தங்கப் பதக்கம் பெற்றார். பலநாடுகள் தங்கப்பதக்கம் பெற முயன்றும் முடியாத நிலையில், ஈரான் பெற்ற 1 பதக்கம்... அதிர்ஷ்டம் தானே!

## தவறுக்குத் தண்டனை

ஆசிய போட்டிகளிலே மிகவும் அசிங்கமான ஒரு நிகழ்ச்சி. வடகொரியா கால்பந்தாட்டக்காரர்கள், தாங்கள் தோற்றதற்குக் காரணம், நடுவர்தான் என்று கருதி அடிதடியில் இறங்கி விட்டனர். தாய்லாந்து நாட்டைச் சேர்ந்த நடுவர் மருத்துவமனையில் சேர்க்கப்படும் அளவுக்குக் காயப் படுத்தப்பட்டார்.

வரம்பு மீறிய வன்முறை செயலில் ஈடுபட்ட வடகொரிய அணி, 'இனி வரும் 2 ஆண்டுகளுக்கு, எந்தவித சர்வ தேசப் போட்டிகளிலும் கலந்து கொள்ளக் கூடாது' என்ற தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது.

குறிப்பு

1978ம் ஆண்டு நடைபெற்ற ஆசிய விளையாட்டில், கால்பந்தாட்டத்தில், டகொரியா தென் கொரியாவுடன் கூட்டாகச் சேர்ந்து சாம்பியன் பட்டத்தை பெற்றிருந்தது என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

## ஒழுங்குக்கு உயர்ந்த இடம்

428 வீரர்கள் வீராங்கனைகள் சீன நாட்டில் இருந்து வந்தனர். 153 வெற்றிப் பதக்கங்களை வென்று முதல் நாடு என்று புகழ் பெற்றனர்.

அன்றுடம் அவர்கள் பெற்று வந்த வெற்றி, அவர்களை தலைவிரித்து ஆடச் செய்யவில்லை. ஆசிய கிராமத்தில் தங்கியிருந்த அவர்கள், மிகவும் ஒழுங்காகவும், கட்டுப்பாட்டுடனும், அமைதியான முறையிலும் நடந்து கொண்டதற்காக, அனைவராலும் பாராட்டப்பட்டனர்.

எச். எம். டி கடிகார நிறுவனத்தினர், ஆளுக்கொரு கைக் கெடிகாரம் அன்பளிப்பாக வழங்கி அவர்களை கௌரவித்தது. ஒழுங்கு ஊராளும் என்பது பழமொழி. இங்கே இது உலகத்தையும் அல்லவா ஆண்டு விட்டது! வெற்றியில் பணிவு விவேகத்தின் முதிர்ச்சி! உண்மைதான்.

## இதுவரை இல்லாத வெற்றி

எந்தக் கூடைப்பந்தாட்டப் போட்டியிலும் 200 வெற்றி எண்கள் எடுத்து, எந்தக் குழுவும் வென்றதாக வரலாறு இல்லை.

ஆனால், ஆசியப் போட்டியில் நடைபெற்ற ஆண்களுக்கான கூடைப் பந்தாட்டப் போட்டியில், ஏமன் நாட்டுக் குழுவினை இராக் குழுவினர் 25—331 என்ற வெற்றி எண்கள் கணக்கில் வென்று வாகை சூடினர்.

மின் அணு சக்தியால் இயங்கிய வெற்றி எண் குறிப்பாக 198க்கு மேல் இல்லை. இராக் 200 வெற்றி எண்கள் எடுத்ததும் அதைக் குறிப்பிட்டுக் காட்ட, வழி இல்லாமல் போயிற்று. அதிகாரிகள் அட்டையைக் காட்டி சமாளித்தனர். பார்வையாளர்கள் இராக்கின் ஆற்றலைக்கண்டு அதிசயித்தனர். வரலாறு அவர்களைப் பாராட்டி பெருமை பெற்றுக் கொண்டது.

251 வெற்றி எண்கள் எடுப்பது என்பது எளிதா என்ன ? இராக் குழுவினை நாமும் பாராட்டுவோம் !

## எட்டிப் பார்த்த எட்டு

தன் நாட்டைவிட்டு வேறு நாட்டுக்கு விளையாட வந்த பெருமை—ஒரு சிறுமிக்குக் கிடைத்தது. ஆமாம்! எட்டு வயது சிறுமி அவள். பிறந்த தேதி 5-11-1974.

ஆசியப் போட்டியில் கலந்து கொள்ள வந்த அத்தனை வீரர்கள் வீராங்கனைகளிலும், மிகச் சிறியவள் என்ற பெருமையைப் பெற்ற அந்த சிறுமியின் பெயர் அகமிஅல்ஷராபி. யேமன் நாட்டைச் சேர்ந்தவள்.

அந்த நாட்டின் மேசைப்பந்தாட்ட ஆட்டத்தில் நான்காவது வரிசையில் உள்ள அந்த பெண்—விளையாடும் மேஜை உயரம் தான் என்றால், அந்தப் பெண் விளைவித்த ஆற்றல்—அத்தனை பார்வையாளர்களையும் ஆச்சரியத்தில் அல்லவா ஆழ்த்தி விட்டது !

எட்டு வயதில் இந்தத் திறமை வந்திருக்கிறது என்றால், எந்த வயதில் பயிற்சியை ஆரம்பித்திருக்க வேண்டும் ? அவளது அரிய முயற்சியும், அளவிலா பயிற்சியும், விளையாட்டுத்தனமில்லாத கட்டுப்பாடான உழைப்புமே அவளை இந்த இனிய புகழுக்கு ஏற்றி வைத்திருக்கிறது !

'வாழ்க வளமுடன், பெறுக புகழ்மிகுந்த எதிர்காலத்தை' என்று நாமும் வாழ்த்துவோமே !

## வீதிவலம் வந்த ஆசிய ஜோதி

முதல் ஆசிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்ற நேஷனல் ஸ்டேடியத்திலிருந்து, போட்டிகள் நடைபெற இருந்த ஜவஹர்லால் நேரு ஸ்டேடியம் வரை, 40 வீரர்கள் வீராங்கனைகள் மூலமாக ஆசியஜோதி உலா வந்தது

நமது பிரதமர் இந்திராகாந்தி ஏற்றித் தந்த ஜோதியை முதலில் எடுத்துச் சென்ற பெருமையை ஸ்ரீராம்சிங் பெற்றார்.

நேரு ஸ்டேடியத்தில் ஏற்றப்பட்ட இந்த ஜோதி 16 நாட்கள் எரிந்தன!

இந்தப் பதினாறு நாட்கள் ஆசிய ஜோதி எரிய 20 டன் எரி வாயு தேவைப்பட்டன. அதாவது, ஒரு பத்திரிகை குறிப்பின்படி, இதில் எரியப் பயன்பட்ட பெட்ரோலிய காஸின் மதிப்பு 3லட்சம் ரூபாய்க்கு மேல்.

ஒரு மணிக்கு 240 கிலோ காஸ் பயன்படுத்தப்பட்டது. என்றாலும் இதனை இலவசமாக வழங்கும் பொறுப்பினை இந்தியன் ஆயில் நிறுவனம் ஏற்றுக் கொண்டு ஒளியேற்றியது.

## வீரர்கள்பற்றிய ஒரு கணக்கு

2304 மில்லியன்கள் எண்ணிக்கையில் வாழ்கின்ற மக்களை உடைய பல நாடுகள். ஆசியப் போட்டிகளில் வந்து பங்கேற்றன, அப்படியென்றால், அது உலக மக்கள் தொகையில் 54 சதவிகிதம் என்று கணக்கிட்டிருக்கின்றனர்.

## 22 வயதான சாதனை

இந்திய ஓட்ட வீரர், பறக்கும் சீக்கியர் என்று புகழ்ப் பெற்ற மில்காசிங், 1960 ஆண்டு ரோம் நகரில் நடைபெற்ற

ஒலிம்பிக் பந்தயத்தில், 400மீட்டர் தூரத்தை ஓடி முடித்து உண்டாக்கிய சாதனை நேரம் 45.60 விநாடி.

1982ம் ஆண்டு ஆசிய விளையாட்டுப் போட்டி நடந்து முடிந்த வரையில் இந்த சாதனையை யாரும் மிஞ்சவில்லை. இந்தப் போட்டியில் வென்ற ஜப்பானிய வீரர் சுசுமு டகானோவின் நேரம் 46.66 விநாடிகள்.

இந்திய வீரரின் 22 வயது சாதனைக்கு இன்றும் வயது ஆகியும் இளமையாகிக் கொண்டிருக்கிறது... இந்தியருக்கு இது பெருமை தரக் கூடிய விஷயம் தாமே !

## தாயைப் போல பிள்ளை.

'தாயைப்போல பிள்ளை, நூலைப்போல சேலை' என்பது நம் நாட்டின் பழமொழி! ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனை, சான்றோன் எனக் கேட்டதாய் என்பது குறள்.

தன்னுடைய மகன் அல்ல அல்ல, மகள்கள், பெற்ற பெருமையை ஒரு தாய் கேட்டு மகிழ்ந்தது மட்டுமல்ல. வீரத் தாய்' என்ற விருதினையும் பெற்று மகிழ்ந்த கதை இந்தப் போட்டிகளில் நடைபெற்றது.

லீகியாங் சன் எனும் 41 வயது தென்கொரியா மங்கைக்கு இரண்டு மகள்கள்.

இளையவள் பெயர் சூய் யூன்ஹி. வயது 15. இவள் 100 மீட்டர், 200 மீட்டர் பின்புறமாக நீந்தும் போட்டியில், மற்றும் 200 மீட்டர் மெட்லே தொடர்நீச்சலில் வென்று 3 தங்கப்பதக்கங்கள் பெற்றாள்.

மூத்தவள், அவளது அக்காளின் பெயர் யன்ஜங் என்பதாகும். வயது 16. அவள் மூன்று போட்டிகளிலும் 3 வெள்ளிப் பதக்கங்களைப் பெற்றாள்

ஆறு பதக்கங்களை அள்ளிக் கொண்டு வந்த மகள்களின் அற்புத சாதனையை வியந்த தாயோ, 1954ம் ஆண்டு மணிலாவில் நடந்த ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் நீச்சல் போட்டியில் கலந்து கொண்டு, தென்கொரிய நாட்டிற்கு முதல் தங்கப்பதக்கம் வென்று தந்தவள்.

அந்த அற்புத வீராங்கனையான வீரத் தாயை, 'சிறந்த தாய்' என்று சாசாகிகோ என்று நிறுவனம் விருது வழங்கிப் பாராட்டியிருக்கிறது.

'நலமுள்ள, வீரமுள்ள ஒரு பெண் நாட்டிற்குக் கண்' என்பது எவ்வளவு உண்மையான வார்த்தை பார்த்தீர்களா!

சினிமா பாதிக்கவில்லை.

சினிமாவைப் பார்த்தே, சீகறிப்போன சிந்தையுடன் சீரழிந்து வரும் சமுதாயம் இப்பொழுது தொடர் கதையாகிக் கொண்டிருக்கிறது. ஆனல், சினிமா உலகிற்குள் சேர்ந்து புகுந்து கொண்டிருப்பவர்கள் நிலை என்ன ?

சாக்கடைக்குள் இருந்தாலும், அதைவிட்டு வெளியே வரும்பொழுது, எந்த பாதிப்பும் நேராமல் அழுக்கில்லாமல் வெளியே வருகின்ற பிள்ளைப் பூச்சியைப் போல, சினிமாவில் நடித்த பிறகும் கூட, அங்கே சிறிதும் 'தன்னையும் தன் வலிமையையும்' இழந்து விடாமல், '**ஆசியாவின் சிறந்த ஓட்டக்காரி**' என்ற புகழைப் பெற்றிருக்கிறாள் **லிடியா டிவேகா** என்ற பிலிப்பைன்ஸ் நாட்டு வீராங்கனை.

17 வயதினளான இந்தப் பெண், கல்லூரி மாணவி மட்டுமல்ல, 'தங்கப் பதக்கம்' என்ற சினிமாவில் கதாநாயகியாக நடித்தவளும் கூட.

என்றாலும் சினிமா அவளை பாதிக்கவில்லை

100 மீட்டர் ஓட்டத்தில் தங்கப் பதக்கம் பெற்று, நல்ல சிறந்த ஓட்டக்காரி என்ற அழியாப் புகழைப் பெற்று விட்டாள். முதலில் படிப்பு, அடுத்தது விளையாட்டு.

கடைசியில் தான் சினிமா என்கிற கட்டுப்பாடான கொள்கையை, நம் நாட்டு வீரர்களும் வீராங்கனைகளும் பின் பற்றினால் நம் நாடு இப்படியா இருக்கும்? இங்கே சினிமா தானே 'எல்லாமுமாக' இருக்கிறது!!!

## 37 வயதில் இரண்டு குழந்தைகள்

ஒலிம்பிக் பந்தயங்களில் மும்முறைத் தாண்டிக் குதிக்கும் போட்டியில் (TRIPLE JUMP) மூன்றுதடவை தங்கப்பதக்கங்களையும், நான்காவது முறையாக வெள்ளிப்பதக்கமும் வென்று, உலகை வியப்பில் ஆழ்த்திய பெருமை விக்டர் சானியேவ் என்ற ரஷ்யருக்கு உண்டு

1968ல் நடந்த மெக்சிகோ ஒலிம்பிக் பந்தயத்திலும்; 1972ல் நடந்த மியூனிக் பந்தயத்திலும்; 1976ல் நடந்த மான்ட்ரியல் பந்தயத்திலும் தங்கப்பதக்கம் வென்ற விக்டர் சானியேவ், 1980ல் மாஸ்கோவில் நடைபெற்ற பந்தயத்தில் தங்கப்பதக்கம் பெறத் தவறிவிட்டார். வெள்ளிப்பதக்கம் வென்ற அந்த வீரருக்கு அப்பொழுது வயது 35. 7 வயது பையனுக்குத் தந்தையான வீரர் அவர்.

அவரையும் மிஞ்சி ஒரு சாதனை நிகழ்த்தியிருக்கிறார் ஜப்பானிய வீரர் ஒருவர். ஆசிய சாதனையில் அவரே அவருக்கு நிகர்.

இரும்புக்குண்டு வீசி எறியும் சங்கிலிக் குண்டு நிகழ்ச்சியில் (HAMMER THROW) இவர் நிகழ்த்திய சாதனையோ, எவராலும் கற்பனை செய்து பார்க்கவே முடியாது.

20 வயதில் தொடங்கிய அவரது சாதனை, 37 வயது வந்த பிறகும் முடியவில்லை. முனைப்புடன் முன்னேறத் தொடங்கி, மின்னிக் கொண்டிருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| 1966ல் | வெள்ளிப்பதக்கம் | வீசியதூரம் | 60.20 மீட்டர் |
| 1970ல் | தங்கப்பதக்கம் | சாதனை | 67.08 மீ |
| 1974ல் | தங்கப்பதக்கம் | சாதனை | 66.54 மீ |
| 1978ல் | தங்கப்பதக்கம் | சாதனை | 68.26 மீ |
| 1982ல் | தங்கப்பதக்கம் | சாதனை | 71.14 மீ |

ஆனால் அவரது அதிக தூரம் எறிந்த சாதனையோ 75.23 மீட்டர் ஆகும். ஆனால் இந்தியாவில் எறிந்து தங்கப்பதக்கம் பெற்ற போது அவருக்கு வயது 37. இரண்டு குழந்தைகளுக்கு தந்தை. சூக்யோ பல்கலைக்கழகத்தில் துணைப் பேராசிரியர் பதவி.

சிகனோபு முரோபுஷி (Shigenobu Murofushi) என்பவர், தன் வயதைப் பற்றிக் கவலைப்படவில்லை. வந்த வலிமையை முன்னேற்றத்திற்காகப் பயன்படுத்திக் கொண்டார். கொஞ்சம் சாமர்த்தியம் வந்தவுடன், காதல் வேண்டும் என்று ஓடுகின்ற நமது வீரர்கள் கொஞ்சம் கவனிக்கவேண்டும். சாதனைகள் புரிய வேண்டும் என்பவர்கள் பல சோதனைகளுக்கும் உட்பட்டாக வேண்டும்.

அதற்கு முரோபுஷியே சாட்சி.

இவரே ஆசியாவின் சிறந்த வீரர் என்ற பட்டத்தையும் பெற்றிருக்கிறார்.

### தொலைக்காட்சிக்கு உதவியவர்

ஆசிய விளையாட்டுப் போட்டிகளை மிக அழகாகப் படம் பிடித்துக்காட்டி, பார்வையாளர்களை மயக்கி விட்டார்கள் இந்திய தொலைக் காட்சி நிலையத்தினர். அவர்களுக்குப் பயிற்சி அளித்த மேற்கு ஜெர்மனி நாட்டினரான ஹோர்ஸ்ட்சிபார்ட் என்பவர் மிகவும் பாராட்டுக்குரியவர்.

இவர் 10 ஒலிம்பிக் பந்தயங்கள், 8 உலகக் கால் பந்தாட்டப் போட்டிகள், 1974ம் ஆண்டு நடந்த ஆசிய விளையாட்டுக்கள் அனைத்திலும் தொலைககாட்சிப் படம் பிடிப்பில் கலந்துகொண்டு பணியாற்றிய சிறந்த அநுபவசாலி.

அவரிடம் பயிற்சி பெற்ற நம்மவர்கள் சோடை போவார்களா என்ன? உலகத்தரத்தின் அளவுக்கு உயர்ந்த தரமான படப்பிடிப்பு என்ற பாராட்டுக்கு அல்லவா நம்மவர்களை ஆளாக்கி விட்டார்!

வாய்ப்பிருந்தால் இந்தியர்கள் எல்லாருக்கும் மேலாக இருப்பார்கள் என்று வெளி நாட்டவர் கூறுவது உண்மை தான். மிகையான புகழ்ச்சி அல்ல...

### பள்ளி மாணவியின் புதிய சாதனை

200 மீட்டர் ஓட்டத்தில் தங்கப்பதக்கம். அடுத்து, 400 மீட்டர் ஓட்டத்தில் முதலாவதாக ஓடி புதிய சாதனை. தங்கப்

பதக்கம். இரண்டு ஓட்டப் போட்டிகளில் இதுவரை யாரும் வெல்லாத சாதனை.

இந்த அற்புத சாதனையைப் புரிந்தவள் ஜப்பானைச் சேர்ந்த வீராங்கனை. ஹிரோமி இசோகி என்பது பெயர். பத்தாவது படிக்கின்ற பள்ளி மாணவி.

இத்தகைய திறமையும் தேர்ச்சியும் இவளுக்கு எப்படி வந்தது? 3 ஆண்டுகளாக, தினம் தவறாமல் 2 மணிநேரம் செய்து வந்த பயிற்சிதான்.

விடாமுயற்சி வென்றிருக்கிறது! உண்மையான உழைப்பு தோற்றதாக சரித்திரமே இல்லை!

மாண்பு விளைவித்த மாணவர்கள்

நமது நாட்டு வீரர்கள், வீராங்கனைகள் அனைவரையும் எடுத்துக் கொண்டால், அத்தனைபேரும் வேலையில் இருந்து பணியாற்றுபவர்கள் தான். 20 வயதை அநேகமாகக் கடந்தவர்கள்.

இங்கே மாணவர் உலகம் என்ன செய்கிறது? என்று கேட்பாரும் இல்லை. பார்ப்பாரும் இல்லை. ஆவன செய்து ஆக்கபூர்வமான பணிகளைத் தருவாருமில்லை.

ஆசிய விளையாட்டுப் பூப்பந்தாட்ட அணியில் இடம் பெற்றிருந்த 15 பேர்களில் 14 பேர் மாணவர்களாவார்கள்.

கிறிஸ்டியன் ஹடிநாதா என்பவரின் வயது 33. மற்றவர்கள் எல்லாம் இளமை ததும்பும் ஆற்றல் உள்ளவர்கள்.

நமது நாடு இந்த நிலையில் என்று வருகிறதோ, அன்று தான், உலக நாடுகளிடையே உன்னத இடத்தைப் பெற முடியும்.

## வரலாறு படைத்த வலசம்மா

400 மீட்டர் தடை தாண்டி ஓடும் ஓட்டத்தில், இந்தியாவுக்குத் தங்கப்பதக்கம் வாங்கித் தந்தது மட்டுமல்ல...ஒரு புதிய ஆசிய சாதனையையும் படைத்த பெருமை கேரளாவைச் சார்ந்த M. D. வலசம்மாவுக்கு உண்டு.

பாலக்காட்டில் வசிக்கும் ஒரு விவசாயியின் மகள். 4 சகோதரிகள், 2 சகோதரர்கள் வலசம்மாவுக்கு உண்டு.

இந்த 21 வயது வீராங்கனை, இப்படி ஒரு புதிய சாதனையை படைக்க என்ன செய்தாள் என்று தெரிந்து கொள்ள வேண்டாமா? 7 ஆண்டுகால கடின உழைப்பு—ஓட்டம்.

ஒரு நிமிடத்திற்குள்ளாக அதாவது 58.47 விநாடிகளில் ஓடி முடித்து, தங்கப்பதக்கம் வென்றதோடு, கேரள அரசு அளித்த 1 லட்ச ரூபாய் பரிசையும் பெற்றுக் கொண்ட வரலாறு, இந்திய இளைஞர்களுக்கும் பெண்களுக்கும் முன்னோடியான ஓர் எழுச்சிமிக்க நிகழ்ச்சியாகும்.

வரலாறு படைத்த வலசம்மாவுக்குப் பயிற்சியளித்த பயிற்சியாளர் A. R. குட்டி அவர்களையும், நாம் வாயார வாழ்த்துவோம்.

## அப்பு...அப்பு

ஆசிய விளையாட்டுக்களில் 'அப்பு' என்ற பெயரிடப்பட்ட குட்டியானைச் சின்னம் ஒன்று, வெண்கலக் கடையில் யானை புகுந்தது என்பார்களே, அந்த நிலைக்கு ஆக்கி விட்டிருந்தது.




அப்புவின் பலவித காட்சிகள்

'எங்கும் அப்பு; எதிலும் அப்பு; விருந்திலும் அப்பு; வியாபாரத்திலும் அப்பு' என்று நாடு பூராவுமே நாட்டியம் ஆடிக் கொண்டிருந்த அப்பு, உயிருள்ள யானையாக நமக்கு அறிமுகம் காட்டி, கடைசியில் பூக்களால் ஆன பொம்மையாக தோற்றம் தந்தது.

இந்த அப்புவைப் பற்றி வந்த ஆயிரக் கணக்கான சர்ச்சைகளையும் சங்கதிகளையும் நாம் மறந்து விடுவோம்.

இந்த அப்பு எதற்காக வந்தது என்பதை மட்டும் நாம் இங்கே அறிந்து கொள்வோம்.

நமது நாடு யானைக்குப் பெயர் போனதாகும். நம் நாட்டின் விஷேஷச் சிறப்பைக் குறித்துக் காட்டுவதற்காக யானையை ஒரு அதிர்ஷ்டச் சின்னமாக நமது ஆசிய விளையாட்டுக் குழுவினர் தேர்ந்தெடுத்தனர்.

யானையானது எல்லோராலும் விரும்பிப் பார்க்கப்படும் அமைப்பும் சிறப்பும் கொண்ட ஒரு விலங்காகும். நமது நாட்டில் மதசம்பந்தமான பெருமையும், மகத்துவமும் இதற்கு நிறைய உண்டு

அதற்கும் மேலாக, யானைக்கு இருப்பது அதிகமான உடல் வலிமை; அதிகமான ஞாபக சக்தி; அதிகமான உறுதி. அதாவது ஞானம், சக்தி, உறுதி என்று மூன்று தன்மைகளும் நிறைந்து கிடப்பதாகும்.

சுடர் விடும் கண்கள்; நெற்றியில் அழகுப் பொட்டு, நின்றுடும் நடன நிலை என்பதாக அப்பு சித்தரிக்கப்பட்டிருக்கிறது.

இப்படிப்பட்ட ஒரு அதிர்ஷ்ட சின்னம் ஆசிய விளையாட்டுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது, நம்மவர்களின்

நிறைந்த ஞானத்தையும், நலமார்ந்த அறிவினையும் நன்கு வெளிப்படுத்தியிருக்கிறது.

## சிறப்புச் சின்னம்

ஒலிம்பிக் போட்டிகள், காமன்வெல்த் போட்டிகள், ஆசியப் போட்டிகள் என எந்தப் போட்டிகளாக இருந்தாலும், அந்தக் குறிப்பிட்டப் போட்டிகளுக்காக; ஒரு விசேஷச் சின்னத்தை மிக அழகானதாகவும், வசீகரமானதாகவும், போட்டியை நடத்தும் நாட்டினர் தேர்ந்தெடுப்பது வழக்கமாக நடந்து வரும் ஒன்றாகும்.

9வது ஆசியப் போட்டிகளுக்கான சிறப்புச் சின்னமாக ஜந்தர் மந்தர் எனும் வான ஆராய்ச்சிக் கட்டிடத்தின் வரைபடத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.

புது தில்லி நகரின் மையத்திலுள்ள பார்லிமெண்ட் தெருவின் ஆரம்பத்தில் வீற்றிருக்கும் ஜந்தர் மந்தர், ஒரு வானிலை ஆராய்ச்சி நிலையமாகும்.

இது சிறந்த கல்வி அறிவின் முழுமையைக் காட்டுவதாக அமைந்திருக்கிறது.

இதுவரை எந்த காட்சிக்காகவும் பயன்படுத்தப்படாத தனித்தன்மை பெற்றிருக்கிறது. இதன் அமைப்பைப் பாருங்கள்! எத்தனை எத்தனை கருத்துக்களை, கற்பனைகளை நமக்கு ஊட்டி விடுகின்றன!

இதன் வடிவ அமைப்போ ஒரு விளையாட்டு மைதானத்தைப் போல், விளங்குகிறது.

உற்றுப் பார்த்தால் மங்களகரமான அத்தி இலையைப் போல் தோற்றம் கொண்டு மகிழ்ச்சியூட்டுகிறது.

மேலும் அதன் நடுவிலே மனம் ஈடுபட்டுப் பார்க்கும் பொழுது இரண்டு கைகளையும் குவித்து வணக்கம் செய்து வரவேற்பது போலவும் வர்ணஜாலம் காட்டுகிறது.

இதன் மேலே உள்ள சூரியன், இது வரை நடைபெற்ற எல்லா ஆசிய விளையாட்டுச் சின்னம் அனைத்திலுமே இடம் பெற்றதாகவே விளங்குகிறது.

இத்தகைய ஒரு ஈடிணையற்ற வடிவமைப்புக் கட்டிடத்தை அமைத்தவர் யார் என்று அறியும் ஆவல் தோன்றுவது நியாயம் தானே !

1699 முதல் 1743 வரை ஆட்சி செய்த ஜெய்பூர் மகாராஜா இரண்டாம் ஜெய்சிங் என்பவர் தான் இதன் ஆதார கர்த்தாவாக இருக்கிருர்.

ஜெய்சிங் மகாராஜா வானசாஸ்திரத்தில் மிகுந்த விருப்பமும் அதிக நாட்டமும் கொண்டவராக விளங்கியதன் காரணமாக, இவ்வரிய கட்டிடத்தைக் கட்டிட ஏற்பாடுகள் செய்தார்

ஜந்தர் மந்தரில் 6 வகைக் கருவிகள் ஆராய்ச்சி செய்ய அதற்குஉதவியாக இருக்கின்றன. உதவிடும் பித்தளைக் கருவிகளைப் புறக்கணித்து விட்டு, பல விதமான உயரம், அகலம் உள்ள அளவுகளைக் கொண்ட மிகப் பெரிய கட்டிடங்களாகக் கட்டி முடித்தார்.

சாம்ராட் யந்திரம், ஜெயப்பிரகாஷ் யந்திரம், ராம யந்திரம், மிச்ர யந்திரம், நியதசக்ர யந்திரம்,

என பல பிரிவுகளை உடைய ஆராய்ச்சிக் கட்டிட அமைப்புகள் மகாராஜாவால் எழுப்பப்பட்டன.

இதற்கு மகாராஜா வைத்த பெயர் ஜிஜ்முகமத்ஷாஹே. இது முகமதிய அரசர் முகமதுஷாவின் நினைவாக இட்ட பெயராகும்

இந்த ஜந்தர் மந்தர் அமைப்பு, மிச்ர யந்திரமாகும். அதைத் தான் ஆசிய விளையாட்டின் விஷேஷச் சின்னமாக எடுத்து பெருமைப் படுத்தி விட்டார்கள்.

இத்தகைய அரிய அற்புதப் படைப்பினைத்தான். நமது நாடு, ஆசிய விளையாட்டுக்களின் விஷேஷச் சின்னமாகத் தேர்ந்தெடுத்திருக்கிறது. அது நம்மவரின் அரிய ஞானத்தையும் சிறப்புற வெளிப்படுத்திக் காட்டியிருப்பதும் ஒரு சிறப்பு அம்சமாகும்



திரு. எஸ். நவராஜ் செல்லையா அவர்கள் தமிழ் இலக்கியத்தில் விளையாட்டுத் துறை நூல்கள் அதிகமாக வெளிவர வேண்டும் என்ற முயற்சியில், இதுவரை 80-க்கும் மேற்பட்ட நூல்களையும், 20-க்கும் மேற்பட்ட கதை கவிதை, நாடக நூல்களையும் எழுதி வெளியிட்டிருக்கிறார். இவர் எழுதிய 'ஒலிம்பிக் பந்தயத்தின் கதை' எனும் நூல் 1977ம் ஆண்டும், 'விளையாட்டுக்களின் கதைகள்' எனும் நூல் 1981ம் ஆண்டும் தேசிய விருதினைப் பெற்றிருக்கின்றன.

தமிழிலும், உடற்கல்வித் துறையிலும், முதுகலைப் பட்டம் (M. A., M. P. Ed.,) பெற்றுள்ள ஆசிரியர் வானொலி, டெலிவிஷன், வாரம் மற்றும் மாதப் பத்திரிகைகளில் தொடர்ந்து விளையாட்டுத் துறை பற்றி பேசியும் எழுதியும் வருகிறார்.

தமிழில் முதன் முறையாக 'விளையாட்டுக் களஞ்சியம்' எனும் விளையாட்டுத் துறை மாத இதழைத் தொடங்கி 1977 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து நடத்திப் பணியாற்றி வருகிறார்.

கிரேஸ் பிரிண்டர்ஸ், 27, அப்பா ரெட்டி தெரு, சென்னை-38.